பக்கங்கள்:-20

# காலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவர் ஆண்டு 2057 | கார்த்திகை 01 | செவ்வாய்க்கிழமை | 18.11.2025 | அதிர்வு 110

## வடக்கு, கிழக்கில் மழை படிப்படியாகக் குறையும்



“வடக்கு மாகாணத்தில் நேற்று இரவு முதல் மழை படிப்படியாகக் குறைவடையும். ஆனாலும் இன்றும் 07



## திருமலை புத்தர் சிலை விவகாரம்; நாடாளுமன்றில் அமைதியின்மை!

சர்ச்சைக்குரிய திருகோணமலை புத்தர் சிலை விவகாரம் தொடர்பில் ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர ஒழுங்குப் பிரச்சினைகளை எழுப்பிய நிலையில் அதற்குச் சபாநாயகர் அனுமதியளிக்காமையினால் சபையில் நேற்று அமைதியின்மை ஏற்பட்டது.

குறித்த புத்தர் சிலை விவகாரம் தொடர்பில் கருத்துத் தெரிவிப்பதற்குத் தனக்கு சபாநாயகர் அனுமதி வழங்கவில்லையென அதற்கு எதிராகத் தயாசிறி எம்.பி. கடும் கோஷங்களை எழுப்பிய நிலையிலேயே சபையில் 05

# மீண்டும் இனவாதத்தை தூண்டும் என்.பி.பி. அரசு

### நாடாளுமன்றில் சாணக்கியன் எம்.பி. குற்றச்சாட்டு



**தேசிய மக்கள் அரசு, நாட்டில் இனங்களுக்கிடையில் மீண்டும் இனவாதத்தைத் தூண்டுகின்றது என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் குற்றஞ்சாட்டினார்.**

**நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.** 06

# உங்களை நம்பி வாக்களித்த தமிழருக்கு முழுத் துரோகத்தை இழைத்துள்ளீர்கள்!

### சபையில் அநுர அரசைக் கடுமையாகச் சாடிய கஜேந்திரகுமார் எம்.பி.

“உங்களை நம்பி, நீங்கள் சொன்னதையெல்லாம் நம்பி உங்களுக்கு வாக்களித்த தமிழ் மக்களுக்கு நீங்கள் முழுமையான துரோகத்தை இழைத்திருக்கின்றீர்கள்.”

– இவ்வாறு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசைக் கடுமையாகச் சாடி நேற்று நாடாளுமன்றத்தில் உரையாற்றினார் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம்.

நீதி அமைச்சு மீதான விவாதத்தின் போது திருகோணமலை கடற்கரையில் சட்டவிரோதமாக பௌத்த வணக்கஸ்தலம் அமைக்கப்பட்டு வருகின்றமைக்கும், அங்கு அடாத்தாகப் புத்தர் சிலை நிறுவப்பட்டமைக்கும் எதிர்ப்புத் தெரிவித்து உரையாற்றும்போதே 07






திருகோணமலையில் மாநகர சபைக்குச் சொந்தமான கடற்கரைப் பகுதியில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்டு வரும் புத்தர் சிலை விவகாரம் தான் கடந்த இரண்டு நாள்களாக தமிழர் தாயகத்தில் பிரதான அரசியல் பேசுபொருள்.

அந்தப் பகுதியில் ஏற்கனவே சட்ட அனுமதியற்ற வகையில் அமைக்கப்பட்டு இருந்த சிற்றுண்டிச் சாலையை அகற்றுவதற்கான நடவடிக்கையை திருகோணமலை மாவட்டக் கரையோரப் பாதுகாப்பு மற்றும் கரையோர மூல வளங்கள் முகாமைத்துவ திணைக்கள அதிகாரிகள் கடந்த வாரம் எடுத்திருந்தனர்.

எனினும் அப்பகுதி பிக்கு ஒருவர் அந்த நடவடிக்கைக்கு எதிர்ப்பு தெரிவித்தமையை அடுத்து அங்கு குழப்பம் ஏற்பட்டது. அதனால் பொலிஸார் தலையிடும் நிலைமை நேர்ந்தது. அச்சமயத்தில் அந்த பிக்கு முன்வைத்த கோரிக்கையின் அடிப்படையில் அந்தச் சிற்றுண்டிச் சாலையை அகற்றுவதற்கு ஒரு வார கால அவகாசம் வழங்கப்பட்டது. அந்த அவகாசம் நேற்று 06

# காலியில் உணவக உரிமையாளரான பெண்ணொருவர் சுட்டுப் படுகொலை!



(கனகராசா சரவணன்)

காலி, மீடியாகொட பகுதியில் மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத இருவர் உணவகம் ஒன்றில் நுழைந்து நேற்று திங்கட்கிழமை இரவு நடத்திய துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தில் உணவக உரிமையாளரான பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

மீடியகொடவைச் சேர்ந்த 47 வயதுடைய ரோசி என அழைக்கப்படும் மகாதுர ரோசிகா ஷமீன் என்பவரே இந்தச் சம்பவத்தில் உயிரிழந்துள்ளார்.

குறித்த பகுதியில் சீன உணவகம் நடத்தி வரும் உரிமையாளரான பெண் சம்பவ தினமான நேற்று இரவு 8.30 மணியளவில் உணவகத்தில் இருந்த போது அங்கு மோட்டார் சைக்கிள் ஒன்றில் வந்த இனந்தெரியாத இருவர், அந்தப் பெண் மீது துப்பாக்கிச்சூடு நடத்தியதில் அவர் படுகாயமடைந்ததையடுத்து வர்கள் அங்கிருந்து தப்பியோடியுள்ளனர்.

இதனையடுத்து படுகாயமடைந்த பெண், பலப்பிட்டிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

சடலம் பிரேத பரிசோதனைக்காக பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மீடியாகொட பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்

இந்தத் துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தில் உயிரிழந்த பெண் இவ்வருடம் மே மாதம் 3 ஆம் திகதி மீடியாகொடவில் உள்ள உணவகத்தில் கரந்தெனிய சுத்தாவின் பிரிவினரால் சுட்டுக் கொல்லப்பட்ட மகாதுர நளின் வசந்தவின் சகோதரி என்பது குறிப்பிடத்தக்கது.

கரந்தெனிய சுத்தாவின் மைத்துனரின் மரணத்துக்குப் பழிவாங்கும் விதமாக இந்தத் துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டுள்ளது என்று கூறப்படுகின்றது.

அதன்படி, இந்த ஆண்டு இதுவரை இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்களின் எண்ணிக்கை 106 ஆக அதிகரித்துள்ளது, இதில் 54 பேர் இறந்துள்ளனர் மற்றும் 53 பேர் காயமடைந்துள்ளனர்.

# 2 மில்லியனை கடந்த சுற்றுலாப் பயணிகள்



நாட்டிற்கு வருகை தந்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 2 மில்லியனை கடந்துள்ளது.

பிரான்ஸை சேர்ந்த இருவர் நேற்று நாட்டிற்கு வருகை தந்ததன் பின்னர் மொத்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 02 மில்லியனை கடந்ததாக சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

மேற்படி இருவரும் ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸ்க்கு சொந்தமான யு.எல் -504 விமானம் ஊடாக நேற்று பிற்பகல் 1.30 இற்கு கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தனர்.


வட மாகாண மரநடுகை மாதம்
கார்த்திகை-2025

“மரங்களைக் காற்றைச் சலவை செய்யும் இயந்திரங்களாகவும், குளிர்விக்கும் பதனப்படுத்திகளாகவும் சொல்லித்தரும் அறிவியலும், உயிர்காக்கும் மரங்களைப் பணங்காய்ச்சி மரங்களாகப் போதிக்கும் பொருளியலும் ஆதிக்கம் பெற்றுள்ள நிலையில் மரங்களுக்கும் எமக்கும் இடையிலான பண்பாட்டு உறவை மீட்டுருவாக்கம் செய்வது அவசியம் ஆகும். இந்தப் பண்பாட்டு உறவே மங்கள் மீதான பற்றுதலை வளர்க்கும்”

-பொ.ஐங்கரநேசன் (தலைவர் - தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம்)



# திருமலை புத்தர் சிலை விவகாரத்தை இனவாதப் பிரச்சினையாக்காதீர்கள்!

## இரு தரப்பையும் அரசு அழைத்துப் பேசி தீர்வு வழங்க வேண்டும் என்றும் நாமல் வலியுறுத்து

“திருகோணமலை புத்தர் சிலை விவகாரப் பிரச்சினையை இனவாதப் பிரச்சினையாக மாற்றுவதற்கு இடமளிக் காதீர். அரசு உடனடியாகத் தலையிட்டு இரு தரப்பினரையும் அழைத்துப் பேச்சு நடத்தி பிரச்சினையைச் சுமுகமாகத் தீர்த்து வைக்க வேண்டும்.”

– இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் தேசிய அமைப்பா ளர் நாமல் ராஜபக்ஷ எம்.பி. தெரிவித் தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று திரு கோணமலை புத்தர் சிலை சம்பவம் தொடர்பில் கருத்து வெளியிடுகையி லேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரி



வித்ததாவது:-

“திருகோணமலையில் விகாரை பிரச்சினை ஏற்பட்டுள்ளது. புத்தர் சிலை யைப் பாதுகாப்புக்காகவே அந்தச் சிலை ஞாயிற்றுக்கிழமை இரவு அங்கிருந்து எடுக்கப்பட்டது எனப் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் குறிப்பிட்டார். ஆனால், பொலிஸாரின் தாக்குத லில் இரு பிக்குகள் காயமடைந்துள்ள னர்.

இந்த விகாரை 1952 ஆம் ஆண்டு நிர்மாணிக்கப்பட்டு 2004 ஆம் ஆண் டில் புனித பூமியாக்கப்பட்டுள்ளது. கிழக் கில் பழமையான அறநெறி பாடசாலை யும் இங்குள்ளது.

எனவே, அரசு உடனடியாகத் தலை யிட்டு பேச்சு நடத்த வேண்டும். இதனை இனவாதப் பிரச்சினையாக மாற்றுவ தற்கு இடமளிக்கக் கூடாது. இரு தரப்பி னரையும் அழைத்துப் பேச்சு நடத்தி தீர்வை வழங்க வேண்டும்.” – என்றார்.

# திருகோணமலையில் புத்தர்சிலை விவகாரம் காரணமாக பௌத்த மதத்தை பாதுகாக்கும் வேலைத்திட்டம் அவசியம்

## தயாசிறி ஜயசேகர எம்.பி. கூறுகின்றார்



“திருகோணமலையில் புத்தர்சிலை விவகாரம் தொடர்பில் அமைச்சர் ஒருவ ருக்கு வந்த தொலைபேசி அழைப்பை யொன்றை தொடர்ந்தே பொலிஸாரால் பிக்குகள் மீது தாக்குதல் நடத்தப் பட்டு, புத்தர் சிலை எடுத்துச் செல்லப்பட் டுள்ளது. இதனால் பௌத்த மதத்தை பாதுகாக்கும் வேலைத்திட்டம் அவ சியமாகும்.”

இவ்வாறு எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தெரிவித் தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம் பெற்ற விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ் வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில்,

“இந்த அரசாங்கத்தில் பௌத்த மதம் தொடர்பில் அமைச்சரொருவர் கிடை யாது. பௌத்த மதத்தை பாதுகாப்பதற்கு அரசியலமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் அதற்கென அமைச்சர் ஒருவர் இருக்கின்றார். முஸ்லிம் பிரதி அமைச் சர் ஒருவர் இருக்கின்றார் அவர் என்ன செய்கின்றார் என்று தெரியவில்லை.

இந்நிலையில் திருகோணமலை புத்தர்சிலை தொடர்பான பிரச்சினை தொடர்பில் கருத்து தெரிவிப்பதற்காக நான் சபாநாயகரிடம் நேரம் கோரினேன். 1951இல் அமைக்கப்பட்ட விகாரை யொன்றே இருக்கின்றது. 2004இல் சுனாமியில் இது அடித்துச்செல்லப்பட்டது. இதற்கு தேவையான தர்மசாலைகளை அமைப்பதற்கான வேலைத்திட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டன.

அதற்கான அடிக்கல்லை காலையில் வைத்து பின்னர் இரவு புத்தர் சிலை பிரதிஸ்டை செய்யப்பட்டது. பொலிஸார் அங்கு வந்து பிக்குகள் மீது தாக்குதல் நடத்தியுள்ளனர். முத்துகுடையை உடைத்தே பிக்குகள் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இது எங்களுக்கு வலிக்காதா? சிங்கள பௌத்தர்கள் சிங்கள பௌத்தர்களாக இருக்க வேண் டும். தமிழர், முஸ்லிம்களுக்கும் அந்த உரிமைகள் இருக்க வேண்டும். இது புதிய புத்தர் சிலையை அமைப்பதற்கோ, புதிய வேலைக்கானதோ அல்ல.

இது தொடர்பில் பொலிஸாருக்கு ஏதேனும் முறைப்பாடு கிடைக்குமாக இருந்தால் பொலிஸார் அது தொடர் பில் விசாரணை நடத்தி பிக்குகளையும் அழைத்து விசாரணை நடத்தினால் பிரச்சினை முடிந்திருக்கும். ஆனால் யாருடையதோ தொலைபேசி அழைப்பு அமைச்சருக்கு வருகின்றது. அமைச்சர் அது தொடர்பில் நடவடிக்கை எடுக்க கூறு கின்றார். பின்னர் பிக்குகளுக்கு தாக் குதல் நடத்தி புத்தர் சிலை தூக்கிச் செல் லப்படுகிறது.

இந்நிலையில் இப்போது அந்த புத்தர் சிலையை மீண்டும் கொண்டுவந்து வைப் பதாக கூறுகின்றனர். புதிதாக அதனை கொண்டுவந்து வைக்க வேண்டியதல்ல. அது அங்கிருந்த சிலையே.. இது இந்த இடத்தில் நிறுத்தப்படபோவதில்லை. அண்மையில் தெஹிவளையில் புத்தர் சிலையொன்று எடுத்துச் செல்லப்பட்டது. இது எல்லா இடங்களிலும் நடக்கின்றது. இதனால் பௌத்த மதத்தை பாதுகாக் கும் வேலைத்திட்டம் அவசியமாகும். இது தொடர்பில் சரியான வேலைத்திட் டங்களை முன்னெடுக்குமாறு நாங்கள் கோருகின்றோம்.”– என்றார்.

# சிங்கள, பௌத்த கோட்பாடுள்ள நாட்டில் சிறுபான்மை என்ற குழுக்களே இல்லை

## திலித் ஜயவீர தெரிவிப்பு



"சிங்கள பௌத்த கோட்பாடு உள்ள நாட்டில் சிறுபான்மை என்ற குழுக்கள் இருக்க வாய்ப்பில்லை. பௌத்தம் இனவாதத்தை முழுமையாக நிராகரிக்கும் கொள்கையை கொண்டது.

– இவ்வாறு சர்வஜன சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் திலித் ஜயவீர தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற 2026 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டத்தில் வெளிநாட்டலுவல்கள்,வெளிநாட்டு, வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத் துறை அமைச்சு, நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாடு அமைச்சுக்கான குழு நிலை விவாதத்தில் உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

"சிங்கள பௌத்த கோட்பாடு உள்ள நாட்டில் சிறுபான்மை என்ற குழுக்கள் இருக்க வாய்ப்பில்லை. அந்தக் கோட்பாட்டுக்கு பௌத்த தர்மமே வழிகாட்டுகின்றது. இந்த நாட்டில் இந்த கோட்பாடுகள் இணைந்த செயற்பாடுகள் உள்ளன. உருவ வழிபாடு என்பது அவசியமற்ற ஒன்று என அமைச்சர் ஒருவர் கூறியிருந்தார்.

இவ்வாறான நிலைப்பாட்டை கொண்டவர்கள் அரசாங்கத்தில் இருக்கையில் அவர்கள் விகாரைக்கு சென்று பிரச்சினையை தீர்க்குமாறு பொலிஸாருக்கு கூறுகையில் அவ்வாறு செல்லும் பொலிஸார் பிக்குகள் மீது தாக்குதல் நடத்துகிறார்கள். துறவிகள் மீது தாக்குதல் நடத்துகிறார்கள்.காவி உடையை கழற்றி அடித்துள்ளனர். ஏன் இவ்வாறு தாக்குதல் நடத்த வேண்டும்.

தீர்க்க வேண்டிய பிரச்சினைகள் பல உள்ளன. சகலரையும் ஒன்றாக பார்க்க வேண்டும், இனவாதத்தை முழுமையாக நிராகரிக்கும் கொள்கையை கொண்டதே எமது பௌத்தம். ஆனால் எவ்வேளையிலும் இந்த நாட்டில் இனவாதம் இருப்பது போன்று கூறுவது இந்த அரசாங்கமே. இல்லாத இனவாதத்தை இருக்கின்றது இருக்கின்றது என்று காலையிலும் மாலையிலும் இந்த அரசாங்கமே குறிப்பிட்டது.

இந்த நாட்டுக்கு உரித்தான கொள்கையை சவாலுக்கு உட்படுத்தும் போது மக்கள் அரசாங்கத்துக்கு எதிராக இனம், மதம் என்ற வேறுபாடின்றி ஒன்றிணைவார்கள். நீங்கள் உருவ வழிபாடு தொடர்பில் கூறுகின்றீர்கள் என்றால் அது இந்துக்களையும் அவமதிப்பதை போன்றதே. நீங்கள் எங்களின் கலாச்சாரத்திற்கு எதிராகவே சிரிக்கின்றீர்கள். ஆனால் இந்த நாட்டு மக்கள் அந்த கலாச்சாரத்துக்கு இணங்கவே வாழ்கின்றனர். அந்த கலாச்சாரத்துடன் மோத வேண்டாம்."– என்றார்.

# புத்தர் சிலை விவகாரம் தொடர்பில் உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்

## அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார உறுதி



"திருகோணமலை புத்தர் சிலை விவகாரம் குறித்து உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். இந்த நாட்டில் தமிழ், முஸ்லிம் மக்களுக்கு பிறிதொரு சட்டம் கிடையாது. அதேபோல் பௌத்த துறவிகளுக்கு என்றும் பிறிதொரு சட்டம் கிடையாது. அனைவரும் பொது சட்டத்துக்கு கட்டுப்பட வேண்டும்."

– இவ்வாறு நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாடு அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் உரையாற்றுகையில்,

"திருகோணமலை புத்தர் சிலை விவகாரம் குறித்து உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். இந்த நாட்டில் தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களுக்கு என்று பிறிதொரு சட்டம் கிடையாது. அதேபோல் பௌத்த துறவிகளுக்கு என்றும் பிறிதொரு சட்டம் கிடையாது.அனைவரும் பொதுச்சட்டத்துக்கு கட்டுப்பட வேண்டும்.

இனவாதம் மற்றும் வெறுப்பு பேச்சுகளுக்கு இடமளிக்க முடியாது. வடக்கு , தெற்கு, கிழக்கு என்று வேறுபாடின்றி அனைத்து இன மக்களையும் நாங்கள் ஒருமித்தே பார்க்கிறோம். அனைவரும் சமமாக நடத்தப்படுவார்கள்.

வழக்குத் தொடுநர் அலுவலகம் பற்றி கஜேந்திரகுமார் பொன்னம்பலம் குறிப்பிட்ட ஒருசில விடயங்களை ஏற்றுக் கொள்கிறோம். இந்த அலுவலகம் இந்த நாட்டில் இடம்பெற்ற சகல குற்றங்கள் குறித்தும் ஆராயும்.இந்த அலுவலகத்தின் செயற்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் பற்றி விரிவாக கலந்துரையாடலாம்"– என்றார்.

# ஜெனிவா மனித உரிமை பேரவையின்போது நாட்டின் பாதுகாப்புக்காக செயற்பட்டுள்ளோம்

## வெளிவிவகார அமைச்சர் விஜித்த ஹேரத் தெரிவிப்பு



“ஜெனிவா மனித உரிமை பேரவையின்போது, நாட்டினதும் மக்களினதும் பாதுகாப்புக்காக நாங்கள் நடுநிலையாக செயற்பட்டிருக்கிறோம் என்றும் ஜெனிவா மனித உரிமை பேரவையை நாங்கள் பேய் என்றோ கடவுள் என்றோ தெரிவிப்பதில்லை எனவும் வெளிவிவகார அமைச்சர் விஜித்த ஹேரத் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

“அரசாங்கத்தின் கடந்த ஒருவருட காலத்தில் உலகில் அனைத்து நாடுகளுடனும் எமது இராஜதந்திர நடவடிக்கைகளை பலப்படுத்திக்கொண்டிருக்கிறோம்.

எமது நற்புறவு, இராஜதந்திர நடவடிக்கைகளை உறுதிப்படுத்திக்கொள்வதற்காக கடந்த ஒருவருட காலப்பகுதிக்குள் வெளிநாட்டு அரச தலைவர்கள் 20 பேர் வரை எமது நாட்டுக்கு வந்துள்ளனர்.

அது மாத்திரமின்றி ஐக்கிய நாடுகளின் மனித உரிமை ஆணையாளர் 9 வருடங்களுக்கு பின்னர் எமது நாட்டுக்கு வந்திருந்தார். அதன் மூலம் எமது நாட்டின் மனித உரிமை, ஜனநாயகத்தை நாங்கள் உறுதிப்படுத்தி இருக்கிறோம்.

அதேபோன்று சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி ஆசிய அபிவிருத்தி வங்கி போன்ற நிதி நிறுவனங்கள் பல்வேறு வகையில் எங்களுடன் உத்துழைப்புடன் செயற்பட்டு வருகின்றன.

அதனை உறுத்திப்படுத்தும் வகையில் உலக வங்கியின் தலைவர் இந்த காலப்பகுதியில் இலங்கைக்கு வந்தார். இதன் மூலம் எமது அபிவிருத்தி வேலைத் திட்டங்களை உலக வங்கி ஊடாக மேற்கொள்ள உறுதிப்படுத்தப்பட்டிருக்கிறது.

அதேநேரம் எமது ஜனாதிபதி வெளிநாடுகளுக்கு 8 உத்தியோகபூர் விஜயங்களை மேற்கொண்டுள்ளதுடன் பிரதமர் 6 உத்தியோகபூர் விஜயங்களை மேற்கொண்டுள்ளனர்.

இதன் மூலம் எமது தொடர்புகளை சர்வதேச நாடுகளுடன் பலப்படுத்திக் கொள்ளவும் அந்த நாடுகளின் வியாபாரிகளுடன் புதிய தொடர்புகளை ஏற்படுத்திக்கொள்ளவும் முதலீட்டார்களை நாட்டுக்கு அழைத்துவரவும் தேவையான கலந்துரையாடல்களை மேற்கொள்ள முடியுமாகி இருக்கிறது.

அதேபோன்று எமது நாடு ஒருசில நாடுகளுடன் நீண்டகாலமாக பொருளாதார, அரசியல் தொடர்புகளை பேணாமல் வந்துள்ளன. அதனால் நாங்கள் ஒரு வருட காலத்துக்குள் பூட்டான்,பங்களாதேஷ், நெதர்லாந்து, இத்தாலி ஜப்பான், பிலிப்பீன், ஐக்கிய அரபு இராஜ்ஜியம் போன்ற நாடுகளுடன் அரசியல், பொருளாதார கலந்துரையாடல்களை மீண்டும் ஆரம்பித்திருக்கிறோம்.

இந்த நாடுகளுடன் பொருளாதார ஒப்பந்தங்களையும் மேற்கொண்டுள்ளோம். அரசாங்கத்தின் ஒரு வருடகாலத்தில் அரசியல், பொருளாதாரம் உள்ளிட்டபல்வேறுதுறைகள்தொடர்பில்வெளிநாடுகளுடன் புதிதாக 70 ஒப்பந்தங்களை மேற்கொண்டுள்ளோம்.இது அரசாங்கதின் பாரிய வெற்றியாகும்.

மேலும் 150 வெளிநாட்டு நிறுவனங்களுடன் புதிய முதலீட்டு வாய்ப்புக்களை ஏற்படுத்திக்கொள்ள முடியுமாகி இருக்கிறோம். அதேபோன்று எமது வியாபாரிகள் வெளிநாடுகளில் வியாபாரம் செய்ய வாய்ப்புக்களை ஏற்படுத்திக்கொடுக்க நடவடிக்கை எடுத்து வருகிறோம். அதேபோன்று பல நாடுகளுடன் இருதரப்பு கடன் மறுசீரமைப்பு நடவடிக்கைகளை முடிவுக்கு கொண்டுவர நடவடிக்கை எடுத்திருக்கிறோம்.

மேலும் அமெரிக்க ஜனாதிபதியின் விசேட வரிவித்திப்பில் எமக்கு நூற்றுக்கு 40 வரி விதிக்கப்பட்டிருந்தது.அதனை நூற்றுக்கு 20 வீதம் வரை குறைத்துக் கொள்ள எங்களுக்கு முடியுமாகி இருந்தது.

அத்துடன்எமதுசிலஉணவுபொருள்களுக்கு பூச்சியம் வரி நிலைக்கு கொண்டு வர ஜனாதிபதி ட்ரம் கடந்த 13 ஆம் திகதி புதிய உத்தரவொன்றை விடுத்திருக்கிறார்.

எமது அந்த தொடர்புகள் மூலமே இந்த விடயங்களை அடைந்துகொள்ள முடியுமாகி இருக்கிறது. இந்தியாவுக்கு கூட இந்த விடயங்களை செய்துகொள்ள முடியாமல் போயிருக்கிறது.

என்றாலும் இது தொடர்பான கலந்துரையாடல் இன்னும் இடம்பெற்று வருகிறது. இன்னும் இதுதாடர்பில் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்படவில்லை.இது தொடர்பில் இதுவரை 17 தடவைகள் பேச்சுவார்தைகள் இடம் பெற்றிருக்கின்றன.

அதேவேளை, அண்மையில் இடம்பெற்ற ஐக்கிய நாடுகள் கூட்டத்தொடரில் ஜனாதிபதி கலந்துகொண்டு பலஸ்தீன் மக்களின் உரிமை தொடர்பில் எமது நாட்டின் நிலைப்பாட்டை ஜனாதிபதி தெளிவாக குறிப்பிட்டிருந்தார். ஜெனிவா மனித உரிமை பேரவையின்போது, நாட்டினதும் மக்களினதும் பாதுகாப்புக்காக நாங்கள் நடுநிலையாக செயற்பட்டிருக்கிறோம்.

ஜெனிவா மனித உரிமை பேரவையை நாங்கள் பேய் என்றோ கடவுள் என்றோ தெரிவிப்பதில்லை. அதனால் எமது நாடின் மனித உரிமையை பாதுகாப்பது தொடர்பில் எமது நிலைப்பாட்டை தெளிவாக உறுதிப்படுத்தி இருக்கிறோம்.

இவ்வாறான பல வெற்றிகளை இந்த குறிய காலத்தில் நாங்கள் அடைந்திருப்பதையிட்டு, நாடு என்றவகையில் மகிழ்ச்சியடைகிறோம். – என்றார்.

## திருமலை புத்தர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அமைதியின்மை ஏற்பட்டது.

நாடாளுமன்றம் நேற்றுக் காலை சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்ன தலைமையில் கூடியபோது, சபாநாயகர் அறிவிப்பு, மனுக்கள் சமர்ப்பிப்பு மற்றும் வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தின் பின்னர் பிரதான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னர் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால, திருகோணமலை புத்தர் சிலை சம்பவம் தொடர்பில் கருத்துத் தெரிவிக்க எழுந்த வேளை நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர ஒழுங்குப் பிரச்சினையொன்றை எழுப்பி அமைச்சரிடம் சில விடயங்களை முன்வைத்து, ”அரசமைப்பின் 9ஆவது சரத்துக்கமைய இலங்கை பௌத்த மதத்துக்கு முன்னுரிமை கொடுக்கப்படுவதுடன், அதன் 10 மற்றம் 14ஆம் பிரிவுகளுக்கமைய மதங்களுக்குரிய உரிமைகளை பாதுகாப்பது அரசின் பொறுப்பாகும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இதனால் திருகோணமலை சம்பவம் தொடர்பில் அமைச்சரிடம்சிலவிடயங்களைக்கேட்கின்றேன்” என்றார்.

தொடர்ந்து உரையாற்றுவதற்குத் தயாசிறி எம்.பி. அனுமதி கோரிய நிலையில் அதற்குச்சபாநாயகர் அனுமதி வழங்கவில்லை. ஆனால் சபாநாயகர் அதற்கு அனுமதி வழங்காமல் பிரதான சபை நடவடிக்கைகளைத் தொடர்ந்து முன்னெடுத்துச் சென்றார்.

இவ்வேளையில் தயாசிறி எம்.பி. ஆவேசமாகச் சபாநாயகரை நோக்கிக் கருத்துக்களைக் கூறிக்கொண்டிருந்தார். இதனால் சில நிமிடங்கள் சபையில் அமைதியின்மை நிலவியது.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

முடிவடைய இருந்த சமயத்திலேயே நேற்று முன்தினம் இரவு புத்தர் சிலை பலவந்தமாக வைக்கப்பட்டது.

நேற்று முன்தினம் இரவும் நேற்றும் திருகோணமலையில் இந்தக் களேபரங்கள் இடம்பெற்றுக் கொண்டிருந்த சமயத்தில் – இப்படி சிற்றுண்டிச்சாலை நேற்று அகற்றப்பட இருந்த வேளையில் – மேற்படி திருகோணமலை மாவட்டக் கரையோரப் பாதுகாப்பு மற்றும் கரையோர மூல வளங்கள் முகாமைத்துவ திணைக்கள அதிகாரிகளுக்கு அவர்களின் கொழும்புத் தலைமையகத்தில் இருந்து ஒரு வழிகாட்டல் உத்தரவு வந்ததாக அறிய வந்தது.

சிற்றுண்டிச்சாலை அகற்றப்படுவதற்கு எதிரான தடை உத்தரவு கொழும்பில் மேனிலை நீதிமன்றம் ஒன்றில் பெற்றுக் கொள்ளப்பட்டு கொழும்புத் தலைமை அலுவலகத்துக்கு வந்திருப்பதாகவும், அதனால் சிற்றுண்டிச் சாலையை அகற்றும் நடவடிக்கையை முன்னெடுக்க வேண்டாம் என்றும் இந்த பணிப்புரையில் தெரிவிக்கப்பட்டதாக அறிய வருகிறது.

சிற்றுண்டிச்சாலையை அகற்றுவதற்கு ஒரு வார கால அவகாசம் பெற்றுக் கொண்டு, அதற்கிடையில் மேனிலை நீதிமன்றம் ஒன்றில் அதை அகற்றுவதற்கு எதிரான தடை உத்தரவை ஒரு புறம் பெற்றபடி, மறுபுறம் புத்தர் சிலை ஒன்றை அருகில் அமைக்கும் நாடகத்தை சம்பந்தப்பட்ட பிக்குவும் குழுவினரும் முன்னெடுத்திருக்கின்றனர் என்பது இப்போது தெரிய வருகின்றது.

புத்தர் சிலை வல்வந்தமாக – சட்டவிரோதமாக – அமைக்கப்பட்டிருக்கின்ற விடயம் நீதி முறைமையின்படி கையாளப்படும் என்றும், நீதிமன்ற வழிகாட்டலில் செயற்படுவோம் என்றும், தமிழ் மக்களின் காதில் அரசு இப்போது பூ வைக்கின்றது. அரசுத் தரப்பு அமைச்சர்களும் எம்.பிக்களும் நீதிமன்றம் வழிகாட்டும் என்று இப்போது கையை நீதிமன்றம் பக்கம் காட்டி சமாளிப்புக் கதைகளை அவிழ்த்து விடுகிறார்கள்.

நல்லது. சட்டப்பட, நீதிப்படி நடவடிக்கை எடுப்பார்கள் என்றே வைத்துக் கொள்வோம். பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் குத்துக்கரணம் அடித்து நேற்று காலை வெளியிட்ட அறிவிப்பின்படி 'முதல் நாள் இரவு ஸ்தாபிக்கப்பட்ட புத்தர் சிலையை அதன் பாதுகாப்புக்காகவே பொலிஸார் எடுத்து வந்து தங்களுடன் வைத்திருந்தனர்' என்ற கதையை நம்புவோம். அப்படி என்றாலும், அந்தப் புத்தர் சிலையை எடுத்து வரச் சென்ற சீருடை அணிந்த பொலிஸ் அதிகாரியை பிக்கு ஒருவர் கன்னத்தில் அறைகிறார். அது பற்றிய வீடியோ காட்சியை இந்தப் பத்தியில் இணைத்துள்ளேன்.

CLICK HERE VIDEO

அந்த பிக்கு விடயத்திலாவது சம்பந்தப்பட்ட அமைச்சர்கள் அல்லது அரசுத் தரப்பினர் கூறும் நீதி, ஒழுங்கு, சட்டம் சரியாகப் பாயுமா அல்லது சாயுமா என்ற கேள்வி எழுகின்றது. சீருடை தரித்த பொலிஸாரைப் பகிரங்கமாக தாக்கிய பிக்குக்கு எதிராக அநுரகுமார அரசின் சட்டம் என்ன நடவடிக்கை எடுத்தது என்பதை அறிவதற்கு தமிழ் மக்கள் காத்திருக்கிறார்கள். திருகோணமலை மக்களை ஜே.வி.பியின் பேரினவாத பிடிக்குள் கொண்டு போய் சிக்க வைத்த பிரதி அமைச்சர் அருண் ஹேமச்சந்திரா போன்றோராவது இது விடயத்திற்கு பதில் பெற்றுத் தந்தால் நன்றாக இருக்கும் என்று நினைக்கிறேன்.

* * *

இலங்கைத் தமிழரசு கட்சி இனப் பிரச்சினை தீர்வு குறித்துப் பேச்சு நடத்துவதற்காக நேரம் ஒதுக்கித் தாருங்கள் என்று கேட்டுக் கொண்டதன்படி, ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கா நாளை புதன்கிழமை மதியம் ஒரு மணிக்கு தமிழரசுக் கட்சியின் பிரமுகர்கள் குழுவை ஜனாதிபதி செயலகத்தில் சந்திக்க இருக்கிறார்.

இலங்கைத் தமிழரசு கட்சியின் எட்டு நாடாளுமன்ற உறுப்பினர்களும், தலைவர், செயலாளரும் இந்தச் சந்திப்பில் பங்கு பற்றுவர் என்று ஏற்கனவே அறிவிக்கப்பட்டு இருந்தது.

ஆனால் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் சிவஞானம் சிறிதரன் ஏற்கனவே இந்தியா சென்றுவிட்டமையினால் இந்தச் சந்திப்பில் அவர் பங்குபற்ற மாட்டார் என்று தெரிகின்றது. அது குறித்து அவர் ஏற்கனவே கட்சித் தலைவர் சி.வி.கே.சிவஞானத்துக்கு தெரியப்படுத்தி இருக்கிறார் என்றும் அறிய வந்தது.

திருகோணமலையில் நெருக்கடி முற்றியசமயம்அங்குசெல்லாமல்கொழும்பில் 'டோரா' போட்டிருந்தார் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் குகதாசன்.

சுகவீனம் காரணமாக திருகோணமலைக்கு உடனடியாக தம்மால் செல்ல முடியவில்லை என்று அவர் கூறினார் எனத் தகவல். திருகோணமலைக்கு உடனடியாக விரைய முடியாத சுகவீனத்தோடு இருக்கும் அவர் நாளை ஜனாதிபதி செயலகத்துக்கு வருவாரோ தெரியவில்லை.

மீதிஎட்டுபேரும்பெரும்பாலும்நாளைய கூட்டத்தில் ஜனாதிபதியைச் சந்திப்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இனப் பிரச்சினைக்கான தீர்வு பற்றிய பேச்சு என்றாலும், கடந்த இரு தினங்களாக திருகோணமலையில் இடம்பெற்ற விடயங்களும் நாளைய பேச்சில் முக்கிய இடம் பெறும் என எதிர்பார்க்கலாம்.

---

## மீண்டும் இனவாதத்தை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"திருகோணமலையில் இனங்களுக்கிடையில் மீண்டும் முரண்பாட்டைத் தோற்றுவிக்கும் ஒரு துரதிஷ்டவசமான சம்பவமொன்றைக் கண்களினூடாகப் பார்க்க முடிந்தது.

எனக்கு முன்பதாகப் பேசிய அமைச்சர் தயசிறி ஜயசேகரவுக்கு ஓர் எச்சரிக்கையை விடுக்கின்றேன். நீங்கள் அரசியல் செய்வதற்காகச் சட்டவிரோதமான செயற்பாடுகளை அனுமதிக்கக்கூடாது. எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவும் "அரசமைப்பிலே பௌத்த இடத்துக்கு முதலிடம் வழங்கப்பட்டுள்ளது" என்று கூறினார். பௌத்த மதமோ எந்த மதத்தினதும் சட்டவிரோதச் செயல்களுக்கு அனுமதியளிக்கக்கூடாது. அது நானாக இருந்தாலும் சரி, பௌத்த மதத் துறவியாக இருந்தாலும் சரி.

நேற்று (நேற்றுமுன்தினம்) திருகோணமலைக் கடற்கரையில் சட்டவிரோதமாகப் புதிய விகாரையொன்று உருவெடுத்தது. நான் அறிந்த வகையில் நண்பர் அருண் ஹேமச்சந்திராவும் இந்த விடயம் தொடர்பில் கரிசனையுடன் இருந்தார்.

நாங்கள், ராஜபக்ஷ அரசுகளில் நடைபெற்ற சட்டவிரோத இனவாதச் செயல்கள் தற்போதைய அரசில் நிகழாது என எதிர்பார்த்தோம். ஆனால், நேற்று (நேற்று முன்தினம்) திருகோணமலையில் விகாரை அமைக்கப்படுவதற்கு எதிராகக் கரையோரப் பாதுகாப்புப் பிரிவைச் சேர்ந்தவர்கள் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாட்டை மேற்கொண்டமைக்கு இணங்க பொலிஸார் இந்த விடயம் சட்டவிரோதமானது எனக் கருதி நிறுத்துவார்கள்எனஎதிர்பார்க்கப்பட்டவேளையில்அன்றைய தினம் இரவு 8 மணியளவில் புத்தர் சிலை அவ்விடத்தில் பொலிஸாரின் உதவியுடன் ஸ்தாபிக்கப்பட்டது.

இந்தச் சட்டவிரோத செயலைத் தடுத்து நிறுத்த முனைந்த திருகோணமலை என்.பி.பி. பிரதி அமைச்சர் அருண் ஹேமச்சந்திராவும் ஒருவர் என்பதை இவ்விடத்தில் கூறிக்கொள்கின்றேன். இதன் பிறகே நான் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபாலவைத் தொடர்பு கொண்டு "இது ஓர் இனவாதச் செயற்பாடு. எதிர்காலத்தில் இன, மதங்களுக்குள் மீண்டும் ஒரு முரண்பாட்டைத் தோற்றுவிக்கும் விடயம். இதிலே நீங்கள் கவனமெடுக்க வேண்டும்." – என்று தெரிவித்தேன்.

இரவு 11 மணியளவில் புத்தர் சிலை அங்கிருந்து அகற்றப்பட்டது. அதன் நிமித்தம் இன்று (நேற்று) காலையில் தேசிய மக்கள் சக்தியின் செயற்பாட்டை வரவேற்றேன். ஆனால், மீண்டும் பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் "இந்தப் புத்தர் சிலையைப் பாதுகாப்பதற்காகவே நாங்கள் அதனை வெளியில் எடுத்துச் சென்றோம்" என்று கூறினார். அமைச்சரின் இந்தக் கருத்தை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன்.

முப்பது வருட கால யுத்தம் நடைபெற்ற போது விடுதலைப்புலிகளால் பௌத்த மதச் சின்னங்கள் சேதப்படுத்தப்படவில்லை. தமிழ் மக்கள் இரவோடு இரவாக சென்று சிலைகளை உடைப்பவர்கள் அல்லர். நாம் இனங்களையும் மதங்களையும் மதிப்பவர்கள். எம் தமிழினம் சட்டவிரோதச் செயல்களுக்கு எதிராகக் குரல் கொடுக்குமே தவிர வன்முறைகளில் ஈடுபட்டு சிலைகளை அழிக்கும் செயலில் ஒருபோதும் ஈடுபடாது.

இந்த இராணுவம் கூட மயிலிட்டி பிரதேசத்தில் – பலாலி விமான நிலையத்தில் இராணுவக் கட்டுப்பாட்டுக்குள் இருக்கும் கத்தோலிக்க தேவாலயத்தைத் தகர்த்துள்ளது.

பிரதி அமைச்சர் அருண் ஹேமச்சந்திராவே! நீங்கள் எமது கட்சியுடன் இணைந்து கொள்ளுங்கள். ஏனெனில் இந்தக் கட்சி (தேசிய மக்கள் சக்தி) உங்களுக்குப் பொருந்தாது. நானும் கடந்த காலத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் இருந்த போது அந்தக் கட்சியின் இனவாதச் செயற்பாடுகள் இவ்வாறே இருக்கும். தமிழ் மக்களின் வாக்குகளைப் பெற்று பிரதி அமைச்சராகிய உங்களின் சங்கட மனநிலை எனக்குப் புரியும். மனசாட்சியின் அடிப்படையில் தேசிய மக்கள் சக்தி செய்த இந்த விடயம் பிழையானது என ஏற்றுக்கொள்ளுங்கள்." – என்றார்.

# நீதிமன்ற நடவடிக்கையில் நாம் தலையிடுவதில்லை

## பிரதி அமைச்சர் சுனில் வடகல தெரிவிப்பு



“திருகோணமலை சம்பவத்தை யாரும் இனவாத, மதவாதமாக மாற்ற வேண்டாம். தற்போது அது நீதிமன்ற நடவடிக்கையாகும். அதனால் நீதிமன்ற நடவடிக்கையில் நாங்கள் தலையிடுவதில்லை.”– இவ்வாறு பிரதி அமைச்சர் சுனில் வடகல தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

“நிறைவேற்றுத்துறை, நீதிமன்றம், நாடாளுமன்றம் ஆகிய மூன்று தூண்களும் சமநிலையாக செயற்படவேண்டும் என நாங்கள் படித்திருக்கிறோம். ஆனால் அது செயற்பாட்டில் வரும் காலம் வரும்வரை நாங்கள் பார்த்திருந்தாம். ஒன்பதாவது நிறைவேற்று ஜனாதிபதியின் கீழே இந்த மூன்று துறைகளும் சமநிலையாக செயற்பட இடமளிக்கப்பட்டிருக்கிறது. ஏனெனில் ஜேஆர், உயர்நீதிமன்ற நீதியர்களுக்குகள் எறிந்தார். அவ்வாறு எந்த சம்பவமாவது இந்த அரசாங்கத்தில் இடம்பெற்றிருக்கிறதா?

அதேபோன்று நாட்டில் நீதிமன்றம் சுயாதீனமாக செயற்படுவதில்லை என நாமல் ராஜபக்ஷ் எம்.பி. தெரிவிக்கிறார். ஆனால் மஹிந்த ராஜபக்ஷ்வின் காலத்தில் பசில்ராஜபக்ஷ்வின் வழக்கை கையாண்டுவந்த சட்டத்தரணியை உயர்நீதிமன்றத்துக்கு நியமித்தார். அதன் பின்னர் திவிநெகும வழக்கில் பசில் ராஜபக்ஷவுக்கு சார்பாக தீர்ப்பெழுதவில்லை என்பதறக்காக பிரதமர நீதியரசர் சிராணி பண்டார நாயக்கவை விரட்டினார்கள். அதன் பின்னர் செலான் வங்கியின் தலைவரை உயர்நீதிமன்ற ஆசனத்தில் அமர்த்தினார்கள்.இவர்கள்தான் இன்று நீதிமன்ற சுயாதினம் தொடர்பில் கதைக்கின்றனர்.

அதேபோன்று ஐக்கிய தேசிய கட்சி நீதிமன்றத்தை எவ்வாறு வழிநடத்தினார்கள், நீதிமன்ற சுயாதீனத்தன்மையை எவ்வாறு பாதுகாத்தார்கள் என்பது வரலாற்றில் எழுதப்பட்டிருக்கிறது. மஹிந்த ராஜபகஷ் காலத்தில் நீதிமன்றத்துக்கு எவ்வாறு அழுத்தம் பிரயோகிகப்பட்டிருக்கிறது, என்பது தொடர்பில் எழுதப்பட்டிருக்கிறது.

ஆனால் இப்போதுதான நீதிமன்ற நடவடிக்கைகள் சுயாதீனமாக செயற்படுகின்றன. நீதிபதிகளின் இடமாற்றம் தொடர்பில் நீதிச்சேவை ஆணைக்குழுவே நடவடிக்கை எடுக்கிறது. அதில் யாருக்கும் அழுத்தங்கள் கொடுக்க முடியாது. ஆனால் பாராளுமன்ற சிறப்புரிமைகளை பயன்படுத்திக்கொண்டு, பல விடயங்களையும் தெரிவிக்கின்றனர். ஆதனால், வெளியில் இடம்பெறும் ஒரு சம்பவத்தை பயன்படுத்திக்கொண்டு, சபையில் உரையாற்ற முடியாதவகையில் நிலையியற் கட்டளையில் திருத்தம் மேற்கொள்ள முடியுமானால், அதனை மேற்கொள்ள வேண்டும். சுயாதின நிறுவனங்கள், சுயாதீனமாக செயற்பட இடமளிக்கவேண்டும்.

திருகோணமலை சம்பவத்தை ஒரு சிலர் இனவாதமாக்க முயற்சிக்கின்றனர். திருகோணமலையில் சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளமை உண்மை. அது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். அதேநேரம் நீதிமன்றத்துக்கும் அறிவித்திருக்கிறது. தற்போது அது நீதிமன்ற நடவடிக்கையாகும். அதனால் அந்த நீதிமன்ற நடவடிக்கையில் நாங்கள் தலையிடுவதில்லை எனவே இந்த சம்பவத்தை இனவாத, மதவாதமாக மாற்ற வேண்டாம். அதேநேரம் நீதிமன்ற சுயாதீனத்தை உயர்ந்த மட்டத்தில் பாதுகாத்துவரும் அரசாங்கம், எமது அரசாங்கம் என்பதை பெருமையும் தெரிவிக்கிறேன்,” என்றார்.

---

### உங்களை நம்பி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கஜேந்திரகுமார் எம்.பி. மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

“திருகோணமலையில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்ட புத்தர் சிலையை நேற்று (நேற்றுமுன்தினம்) இரவு அகற்றிய போது, சாதாரண சிங்கள மக்கள் அதை எதிர்க்கவில்லை.

ஏனெனில், இனவாதத்தையும் மதவாதத்தையும் நீக்குவதாக நீங்கள் சொன்னதை நம்பி அவர்கள் உங்களுக்கே வாக்களித்திருந்தார்கள்.

இங்கிருக்கும் திருகோணமலைக்கான தமிழ் நாடாளுமன்ற உறுப்பினரையும் அவர்கள் தெரிவு செய்திருந்தார்கள்.

நீங்கள் நேற்று (நேற்றுமுன்தினம்) இரவு எடுத்த நடவடிக்கையை எதிர்த்ததெல்லாம் சிங்களக் காடையர்கள் மட்டுமே.

அதைக்கண்டு நீங்கள் உண்மையில் பின்வாங்கியிருந்திருக்கக்கூடாது. அந்த இனவாத – மதவாத காடைத்தனத்தைக் கண்டு பின்வாங்கியிருந்திருக்கக்கூடாது.

உண்மையில் நீங்கள் என்ன செய்திருக்கவேண்டுமெனில், மக்களிடம் சென்று எது சரி, எது பிழை என்பதை, எப்படியான அநீதி இழைக்கப்பட்டிருக்கின்றது என்பதை நேர்மையுடன் சொல்லியிருந்திருக்க வேண்டும்.

ஆனால் , அதற்குப் பதிலாக நீங்கள் இப்போது செய்ததெல்லாம் (மீண்டும் புத்தர் சிலையைஅதேஇடத்தில்நிறுவியமை),நீங்கள் (இனவாதிகள் இல்லை என) சொன்னதை நம்பி உங்களுக்கு வாக்களித்த தமிழ் மக்களுக்கும் உங்களுக்கு வாக்களித்த சிங்களரல்லாத வாக்காளருக்கும் முழுமையான துரோகத்தை இழைத்திருக்கின்றீர்கள்.” – என்றார்.

---

### வடக்கு, கிழக்கில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஒரு சில இடங்களில் கனமான மழை கிடைக்கும் வாய்ப்புள்ளது.” – என்னு யாழ். பல்கலைக்கழக புவியியல்துறைத் தலைவர் பேராசிரியர் நா.பிரதீபராஜா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“கிழக்கு மாகாணத்தில் இன்று இரவு முதல் படிப்படியாக மழை குறைவடையும்.

மத்திய, மேற்கு மற்றும் வட மேல் மாகாணங்களுக்கு தற்போது கிடைக்கும் மழை நாளை வரை தொடரும்.

மீண்டும் எதிர்வரும் 23.11.2025 முதல் கிடைக்கவிருக்கும் கன மழையை எதிர்கொள்ளத் தயாராகுவோம்.

குறிப்பாக எதிர்வரும் 24.11.2025 மற்றும் 25.11.2025 ஆகிய நாள்களில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் உட்பட்ட நாட்டின் பல பகுதிகளுக்கும் மிகக் கனமழை கிடைக்கும் வாய்ப்புள்ளது.

இந்த மழை ஒரு புயல்ஃ ஆழ்ந்த காற்றமுத்த தாழ்வு மண்டலத்தோடு தொடர்புடைய மழை என்பதனால் மிக வேகமான காற்று வீசுகையோடு தொடர்புடைய மழையாக அது இருக்கும்.

புயல்ஃ ஆழ்ந்த காற்றமுத்த தாழ்வு நிலை காலப்பகுதிகளில் அவற்றின் தாக்கம் காரணமாக சமுத்திரப் பகுதிகளின் நீர் மட்டம் உயர்வாக இருக்கும் என்பதனால் கிடைக்கும் மழைநீர் இயற்கையான ஈர்ப்பு விசை செல்வாக்கினால் கடலைச் சென்றடைய மிக தாமதமாகும்.

ஏற்கனவே யாழ்ப்பாணம், முல்லைத்தீவு மற்றும் மட்டக்களப்பு பகுதிகளில் நிலம் நிரம்பு நிலையை எட்டியுள்ளது. ஆகவே, எதிர்வரும் நாட்களில் கிடைக்கவுள்ள மழை தரைக்கீழ் நீராக ஊடுருவ முடியாது.

ஆனால் எதிர்வரும் 24 மற்றும் 25 ஆம் திகதிகளில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் கன மழை கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

ஆகவே, மிக வேகமான காற்று வீசுகை, நிலம் நிரம்பிய நிலை, கடல்நீர் மட்ட உயர்வு போன்றனவற்றோடு கிடைக்கும் தொடர்ச்சியான கன மழை வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் குறிப்பாக யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்டங்களின் தாழ்நிலப் பகுதிகளில் வெள்ள அனர்த்தத்தை உருவாக்கும்.

எனவே நாம் அதற்கேற்ற வகையில் எம்மைத் தயார்ப்படுத்துவோம்.” – என்றார்.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# மாறாப் போக்கு!

தெற்கில் அரசாங்கங்கள் மாறுகின்றன. கட்சிகள் மாறுகின்றன. ஆனால் சிறுபான்மையினரான தமிழர்கள் மீது பேரினவாதிகள் அடக்கு முறையையும் அடாவடித்தனத்தையும் ஆக்கிரமிப்பையும் கட்டவிழ்த்து விடுகின்ற காட்சிகள் மாத்திரம் மாறுவதே இல்லை என்று திருகோணமலை 'ராவண சேனா' அமைப்பின் தலைவர் செந்தூரன் சுட்டிக் காட்டியிருக்கிறார்.

இதுதான் இலங்கையின் கடந்த 75 ஆண்டுகால அரசியல் சரித்திரமாகும். பேரினவாதிகள் - நாட்டின் பெரும்பான்மையினர் - அந்தப் பேரினவாத மனோவியாதியில் மூழ்கிக் கிடக்கின்றனர். தென்னிலங்கை சிங்கள மூளையத்தின் ஆழ்ந்த மனக்குகைக்குள் அந்த இனவாத வெறி செழும்பேறிக் கிடக்கின்றது. அதை அகற்றுவது என்பது இலகுவில் சாத்தியப்படக்கூடியது அல்ல என்பதை திருகோணமலையில் கடந்த இரண்டு நாள்களாகக் கட்டவிழ்ந்த விடயங்கள் வெளிப்படுத்தி உறுதிப்படுத்தி நிற்கின்றன.

திருகோணமலையில் கட்டவிழ்ந்த இந்த அநீதியை - பேரினவாத அடக்குமுறைக் கொடூரத்தை - இனக்குரூரச் செயலை - நாட்டின் மக்கள் அனைவரும் இன, மத பேதங்களைக் கடந்து, தங்களுக்குள் ஒன்றிணைந்து எதிர்க்க முன்வர வேண்டும் என்று தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அழைப்பு விடுத்திருக்கின்றார்.

அப்படிப் பேரினவாத ஆதிக்கத்தை நாட்டு மக்கள் ஒன்றுபட்டு எதிர்ப்பதற்கு முன்வர வேண்டும் என்ற அவரது கோரிக்கை நீதியானது. நியாயமானது. கண்ணியத்தின்பாற்பட்டது. சரியானது.

ஆனால் முழுமையாகப் பேரினவாத சகதிக்குள் மூழ்கிக் கிடக்கும் சராசரி சிங்கள மக்கள், இத்தகைய நீதிப் போராட்டத்துக்கு ஆதரவு தருவார்கள் என்று எதிர்பார்ப்பது எவ்வளவு தூரம் பயனுள்ளதாக அமையும் என்பதுதான் கேள்வி.

அதற்காக அவர்கள் அனைவரையும் நாங்கள் ஒதுக்கி நடக்க வேண்டும் என்பதல்ல. கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எடுத்த இம்முயற்சியை நீண்ட பல காலமாக பலரும் முன்னெடுத்து வந்திருக்கிறார்கள். ஆரம்பத்தில் முழுமையான பேரினவாதிகளாகச் செயற்பட்ட ஜே.வி.பி. கூட சில சமயங்களில் - அவ்வப்போது - இத்தகைய நீதியான போராட்டங்களுக்கு பொதுமட்டங்களில் ஆதரவு தந்து செயல்பட்டு, நடிப்புக் காட்டியிருப்பதும் உண்டு.

ஆனால் இலங்கையின் ஆட்சி அதிகாரத்தை இலகுவாக கைப்பற்றுவதற்கும், கைப்பற்றிய அதிகாரத்தை தொடர்ந்துதக்கவைத்துக்கொள்வதற்கும், பேரினவாத மேலாதிக்க வெறிப்போக்கு சிந்தனையையும் செயற்பாட்டையும் குறுக்கு வழி மார்க்கமாக கொண்டுள்ள தென்னிலங்கைத் தரப்புக்கள் இத்தகைய நீதி, நியாயமான போராட்டங்களுக்கு - அவை நீதியானவை என்று தெளிவாக தெரிந்திருந்தும் கூட அவற்றில் கூட்டிணைந்து வரப்போவதில்லை என்பது அப்பட்டமானது.

சிங்களத்தின் மூளை மையத்தை இந்தப் பேரினவாத மேலாதிக்க வெறி பற்றிப் பீடித்து, ஆகர்ஷித்து, வைத்திருக்கையில், அதற்கு எதிரான நீதியான போராட்டத்திற்கு - நியாயமான செயற்பாட்டுக்கு - அந்த வெறிப்போக்கில் இருந்து வெளிப்பட்டு சிங்கள மக்களும் ஆதரவு தருவார்கள் என்று எதிர்பார்ப்பது துர்லபம்தான். அத்தகைய ஆதரவு தரும் மனநிலை சிங்களத்தின் சிந்தனை ஓட்டத்தில் இருக்குமானால் நாட்டின் இனப் பிரச்சினைக்கு எப்போதோ தீர்வு கிட்டியிருக்கும் என்பதும் தெளிவானது.

ஆயினும் கூட அடிமேல் அடி நடித்தால் அம்மியும் நகரும் என்பது போல, பேரினவாத அரசியல் கட்சிகளையும் இயக்கங்களையும் அரசியல் தலைவர்களையும் புறமொதுக்கிவிட்டு, சாதாரண சிங்கள மக்களிடம் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் முன்வைத்திருக்கின்ற கோரிக்கையோடு சென்று முயற்சித்துப் பார்ப்பதில் தவறு ஒன்றும் இல்லை. அவர்களின் மனம் நீதியின் பாற்பாட்டுச் செயற்படுமானால் இத்தகைய போராட்டங்களுக்கு கணிசமான ஆதரவும் வெற்றியும் கிட்டும் என்று நம்பலாம். ஆனால் பேரினவாதம் எப்போதும் நீதி, நியாயத்தின்படி செயல்படுவதே இல்லை என்பதுதான் யதார்த்த உண்மையாகும்.



## சவூதி அரேபியா பஸ் விபத்து;

# ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 18 பேர் உயிரிழந்த சோகம்

சவூதி அரேபியாவில் நடந்த பஸ் விபத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 18 இந்தியர்கள் உயிரிழந்த சம்பவம் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

ஹைதராபாத்திலிருந்து சவூதி அரேபியாவிலுள்ள மக்கா மற்றும் மதினாவுக்கு னித யாத்திரை மேற்கொண்ட 45 பேர் பஸ் விபத்தில் பரிதாபமாக உயிரிழந்தனர்.

உயிரிழந்த 45 பேரில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 18 பேர் உயிரிழந்தமை பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

ஹைதராபாத் ராம் நகரைச் சேர்ந்த இந்த குடும்பத்தினர் உம்ரா புனிதப் பயணத்தை நிறைவேற்றுவதற்காக மக்கா சென்று விட்டு அங்கிருந்து மதினா சென்றுள்ளனர். கடந்த 8 நாள்களுக்கு முன்பு இந்தியாவிலிருந்து புறப்பட்டுச் சென்ற அவர்கள், வரும் சனிக்கிழமை மீண்டும் தாயகம் திரும்ப திட்டமிட்டிருந்தனர் என அவர்களது உறவினர்கள் கூறுகின்றனர். உயிரிழந்தவர்களில் 9 பெரியவகள், 9 குழந்தைகள் இருந்தனர் என அவர்கள் தெரிவிக்கின்றனர்.

உயிரிழந்த மற்றவர்கள் ஹைதராபாத் மல்லேபல்லி, பஜார் காட், ஆசிஃப் நகர் ஆகிய பகுதிகளை சேர்ந்தவர்கள் என்று கண்டறியப்பட்டுள்ளது.

# பிஹார் பேரவையை கலைப்பதற்கு முதல்வர் நிதிஷ் குமார் பரிந்துரை



பிஹார் சட்டப்பேரவைத் தேர்தலில் ஆளும் தேசிய ஜனநாயக கூட்டணி 202 இடங்களில் வென்று ஆட்சியை தக்கவைத்துக் கொண்டது.

இந்நிலையில், இப்போதைய அமைச்சரவையின் கடைசி கூட்டம் முதல்வர் நிதிஷ் குமார் தலைமையில் நேற்று நடைபெற்றது. இதில், சட்டப்பேரவைத் தேர்தலில் அமோக வெற்றி பெற்றதற்காக நிதிஷ் குமாருக்கு அமைச்சர்கள் வாழ்த்து தெரிவித்தனர்.

பின்னர் இப்போதைய சட்டப்பேரவையை கலைப்பது என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இதன்படி, முதல்வர் நிதிஷ் குமார் ஆளுநர் ஆரிப் முகமது கானை நேற்று சந்தித்தார். அப்போது சட்டப்பேரவையை கலைப்பதற்கான பரிந்துரை கடிதத்தை வழங்கினார்.

இதன்படி, எதிர்வரும் 19ஆம் திகதி சட்டப்பேரவை முறைப்படி கலைக்கப் படும்.

இதையடுத்து, புதிய அரசு அமைப்பதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. எதிர்வரும் 20 ஆம் திகதி பாட்னாவில் உள்ள காந்தி மைதானத்தில் நடைபெறவுள்ள பிரம்மாண்டமான நிகழ்ச்சியில் நிதிஷ் குமார் 10ஆவது முறையாக பதவியேற்க உள்ளார்.

இந்நிகழ்ச்சியில், பிரதமர் மோடி, மத்திய அமைச்சர்கள், பா.ஜ.க. கூட்டணி கட்சிகள் ஆளும் மாநில முதல்வர்கள் உள்ளிட்டோர் பங்கேற்க உள்ளனர்.



## பிஹார் தேர்தல் வெற்றி எதிரொலி:

# எம்.எல்.ஏக்களின் எண்ணிக்கையை 1800 ஆக உயர்த்த பா.ஜ.க. திட்டம்

பிஹார் தேர்தல் வெற்றியின் எதிரொலியாக இந்தியா முழுவதும் உள்ள சட்டப்பேரவைகளில் உள்ள பா.ஜ.க. எம்.எல்.ஏக்களின் எண்ணிக்கை 1,800 ஆக உயர்த்த பா.ஜ.க. மேலிடம் திட்டமிட்டுள்ளது.

கடந்த 14ஆம் திகதி வெளியான பிஹார் சட்டப் பேரவைத் தேர்தல் முடிவுகளில்,101இடங்களில்போட்டியிட்டபா.ஜ.க. 89 இடங்களில் வெற்றி பெற்றது. இதையடுத்து பிஹாரில் மீண்டும் தேசியஜனநாயகக் கூட்டணி ஆட்சி அமையவுள்ளது.

இந்நிலையில் நாடு முழுவதும் பா.ஜ.க. எம்.எல்.ஏக்களின் எண்ணிக்கைய உயர்த்த பா.ஜ.க. மேலிடம் திட்டமிட்டுள்ளது. இதுதொடர்பாக பா.ஜ.க. செய்தித் தொடர்பாளர் அமித் மாள்வியா தனது எக்ஸ் சமூக வலைதளப் பக்கத்தில் வெளியிட்ட பதிவில்,

“பலசட்டப்பேரவைத்தேர்தலில்பா.ஜ.க. வேட்பாளர்கள் வெற்றி பெற்ற எம்.எல். ஏவாக பதவியேற்றுள்ளனர். நாடு முழுவதும் உள்ள சட்டப் பேரவைகளில் பா.ஜ.க எம்.எல்.ஏக்களின் எண்ணிக்கை தொடர்ந்து உயர்ந்து வருகிறது. இது வரும் தேர்தல்களிலும் தொடரும். தற்போது நாடு முழுவதும் உள்ள சட்டப் பேரவைகளில் பா.ஜ.க. எம்எல்ஏக்களின் எண்ணிக்கை 1,654 ஆக உள்ளது.

அடுத்த 2 ஆண்டுகளில் பா.ஜ.க எம்.எல்.ஏக்களின் எண்ணிக்கையை 1,800 ஆக உயர்த்த பா.ஜ.க. மேலிடம் திட்டமிட்டுள்ளது. கடந்த 1985 ஆம் ஆண்டில் நடைபெற்ற தேர்தல்களின்போது காங்கிரஸ் அமோக வெற்றி பெற்று நாடு முழுவதும் 2,018 எம்.எல்.ஏக்களைப் பெற்றிருந்தது. முன்னாள் பிரதமர் இந்திரா காந்தி சுட்டுக் கொல்லப்பட்டு எழுந்த அனுதாப அலையால் அதிக எம்.எல். ஏக்களை அக்கட்சி பெற்றது. தற்போதுள்ள நிலையில் அடுத்த 2 ஆண்டுகளில் 1,800 எம்.எல்.ஏக்கள் என்ற நிலையை அடைய பா.ஜ.கவால் முடியும்.

காங்கிரஸ் அதன் உச்சத்தை மரபுரிமையாகப் பெற்றது. பா.ஜ.க, படிப்படியாக வளர்ச்சி பெற்று வருகிறது. ஒவ்வொரு இடத்திலும், ஒவ்வொரு மாநிலத்திலும், போராட்டத்தின் மூலமும், வளர்ச்சிப் பணிகளின் மூலமும் பா.ஜ.க. தனது எம்.எல்.ஏக்களைப் பெற்று வருகிறது. எதிர்காலம் என்பது உழைக்கும் ஒரு கட்சிக்கே உரியதாகும். மரபில் வாழும் ஒரு கட்சிக்கே அல்ல.

2014 ஆம் ஆண்டு முதல் பா.ஜ.க எம்.எல்.ஏக்களின் எண்ணிக்கை தொடர்ச்சியாக உயர்வு பெற்று வருகிறது. 2014 இல் இந்தியா முழுவதும் 1,035 எம்.எல்.ஏக்கள் இருந்தனர். இது 2015 இல் 997 ஆகவும், 2016 இல் 1,053 ஆகவும், 2017 இல் 1,365-ஆகவும், 2018 இல் 1,184 ஆகவும், 2019 இல் 1,160 ஆகவும், 2020 இல் 1,207 ஆகவும், 2021 இல் 1,278 ஆகவும், 2022 இல் 1,289 ஆகவும், 2023 இல் 1,441 ஆகவும், 2024 இல் 1,588 ஆகவும் இறுதியாக 2025 இல் 1,654 ஆகவும் உயர்ந்துள்ளது.” என்று குறிப்பிட்டுள்ளார்.

# லெபனானின் எல்லைக்குள் இஸ்ரேல் சுவர் எழுப்புகிறது எனக் குற்றச்சாட்டு!



லெபனான் எல்லைக்குள் இஸ்ரேல் சுவர் எழுப்புவதாக இஸ்ரேலின் மீது குற்றச்சாட்டு எழுந்துளது.

இஸ்ரேல்-காசா போரில் ஹமாஸ் அமைப்பினருக்கு ஆதரவாக லெபனானில் உள்ள ஹிஸ்புல்லா கிளர்ச்சியாளர்கள் களமிறங்கினர். இதனால் லெபனான் மீதும் இஸ்ரேல் போர் தொடுத்தது. பின்னர் அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப் தலையீட்டால் கடந்த ஆண்டு போர் நிறுத்த ஒப்பந்தம் கையெழுத்தானது. இதற்கிடையே 2022 இல் காசாவுடனான போர் தொடங்கியதில் இருந்தே தனது வடக்கு எல்லையை இஸ்ரேல் பலப்படுத்தி வருகிறது. அதன் ஒருபகுதியாக லெபனானின் யாரோன் பகுதியில் இஸ்ரேல் சுவர் எழுப்பியது. இந்த சுவர் தங்களது எல்லையை தாண்டி வருவதாக லெபனான் அதிபர் ஜோசப் அவுன் குற்றம்சாட்டி உள்ளார்.

எனவே அந்த சுவரை அகற்றுமாறு இஸ்ரேல் ராணுவத்துக்கு ஐக்கிய நாடுகளின் எல்லை காக்கும் படை வலியுறுத்தி உள்ளது.







# ஜப்பானில் வெடித்த எரிமலை; விமான சேவைகள் இரத்தாகின்

ஜப்பானில் 13 மாதங்களாக உறங்கிக் காண்டிருந்த எரிமலை வெடித்துச் சிதறியதால் அங்கு விமான சேவைகள் இரத்து செய்யப்பட்டு உள்ளன.

எரிமலைகள் அதிகம் காணப்படும் ஜப்பானில் எப்போது எரிமலை விழித்து, நெருப்பு பிழம்புகளை உமிழத் தொடங்கும் என்று தெரியாது.

இந்நிலையில் 13 மாதங்களாக அமைதியாக இருந்த சகுராஜிமா என்ற எரிமலை இப்போது நெருப்பை உமிழத் தொடங்கி இருக்கிறது.

இந்த எரிமலை ககோஷிமா நகரத்தின் அருகில் உள்ளது அடுத்தடுத்து 2 முறை நெருப்பு பிழம்புகளை உமிழ்ந்ததால் வானில் கிட்டத்தட்ட 4.4 கிலோ மீற்றர் தூரம் புகை மண்டலமாகவும், புழுதியாகவும் காட்சி அளித்தது.

இது அந்நாட்டின் விமான சேவையை முற்றிலும் பாதித்துள்ளது.

வான்வழி பாதையில் புகை, சாம்பல்கள் நிரம்பிக் காணப்பட்டதால் ககோஷிமா விமான நிலையத்திலிருந்து புறப்படவேண்டிய 30க்கும் மேற்பட்ட விமானங்களின் சேவை இரத்து செய்யப்பட்டு உள்ளது.

மேலும் பல்வேறு நகரங்களுக்குச் செல்ல வேண்டிய விமானங்களின் வருகை, புறப்பாடுகளும் தாமதமாகி இருக்கின்றன.

சகுராஜிமா எரிமலை ஜப்பானின் பிரபலமான எரிமலையாகும்.

2019ம் ஆண்டு நெருப்பு பிழம்புகளை உமிழ்ந்த போது, வானில் 5.5 கிமீ புகை மண்டலமாகவும், தூசுகள் நிரம்பிக் காணப்பட்டது.

# ஷேக் ஹசீனாவை ஒப்படைக்குமாறு இந்தியாவுக்கு பங்களாதேஷ் அறிவிப்பு!

இந்தியா – பங்களாதேஷ் நாடு கடத்தல் ஒப்பந்தத்தின் அடிப்படையில், முன்னாள் பிரதமர் ஷேக் ஹசீனாவையும் அசாதுஸ்மான் கான் கமலையும் இந்தியா தங்களிடம் ஒப்படைக்க வேண்டும் என பங்களாதேஷ் அரசு கோரிக்கை விடுத்துள்ளது.

கடந்த ஆண்டின் ஓகஸ்ட் மாதத்தில் பங்களாதேஷ் முழுவதும் மாணவர்கள் மோதிய போராட்டம் வன்முறையாக மாறி, ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் உயிரிழந்ததுடன், பலர் காயமடைந்தனர்.

இந்த சம்பவத்துக்குப் பிறகு பெரும் அழுத்தத்தை எதிர்கொண்ட ஷேக் ஹசீனா பதவியை விட்டு விலகி, ஆட்சியும் கவிழ்ந்த நிலையில் இந்தியாவில் தஞ்சம் புகுந்தார்.

பின்னர் பேராசிரியர் முகமது யூனுஸ் தலைமையில் இடைக்கால அரசு பொறுப்பேற்றது.

புதிய அரசு அமைந்ததும், ஷேக் ஹசீனாவுக்கு எதிராக இனப்படுகொலை, ஊழல் உள்ளிட்ட பல்வேறு கடுமையான குற்றச்சாட்டுகள் பதிவு செய்யப்பட்டன.

மாணவர் போராட்டத்தை அடக்குவதற்காக அவர் திட்டமிட்டு உயிரிழப்புகளை ஏற்படுத்த உத்தரவிட்டார் எனவும் குற்றம் சாட்டப்பட்டது.ஆனால், இத்தகையகுற்றச்சாட்டுகளை ஷேக் ஹசீனா மறுத்து வந்தார்.

எவ்வாறாயினும், இந்த வழக்கில் சர்வதேச குற்ற தீர்ப்பாயம்



தீர்ப்பை வழங்கியது. நீதிபதிகள் ஹசீனாவை குற்றவாளி என அறிவித்து, மரண தண்டனை விதிக்க உத்தரவிட்டனர்.

எனினும், இந்த தீர்ப்பு பாரபட்சமானது என்றம் அரசியல் பழிவாங்கும் நடவடிக்கையின் விளைவுமெனஅவர் கருத்து குற்றஞ்சாட்டியுள்ளார்.

இந்நிலையில், ஹசீனாவை நாடு கடத்த வேண்டும் என்ற பங்களாதேஷ் அரசின் கோரிக்கைக்கும், அவருக்கு விதிக்கப்பட்ட தண்டனைக்கும் தொடர்பாக இந்தியா இதுவரை எந்தப் பதிலும் அளிக்கவில்லை.



# இனவாதம் பழுத்துப்போன பெரும்பான்மையின அரசுகளின் தொடரும் அடாவடிதான் திருமலை புத்தர் சிலை விவகாரம்

## நாடாளுமன்றில் ரவிகரன் எம்.பி. விசனம் தெரிவிப்பு

**(விஜயரத்தினம் சரவணன்)**

ஈழத் தமிழர்களின் பூர்வீக இடங்களிலெல்லாம் இனவாதம் பழுத்துப்போன பெரும்பான்மை அரசுகளால் அடாவடித்தனமாக பௌத்தமயமாக்கல் செயற்பாடுகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படுகின்றன என வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்துள்ளார்.

அத்தகைய பௌத்த மயமாக்கல் செயற்பாடுகளின் தொடர்சியாகவே திருகோணமலையில் இடம்பெற்ற புத்தர்சிலை அமைக்கும் செயற்பாடும் இடம்பெற்றுள்ளதாகவும் அவர் இதன்போது சுட்டிக்காட்டியுள்ளார்.

நாடாளுமன்றில் நேற்று இடம்பெற்ற 2026ஆம் ஆண்டிற்கான வரவு – செலவுத்திட்ட நீதி அமைச்சின் மீதான குழுநிலை விவாதத்தில் பங்கேற்றுக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் –

போருக்குப் பிறகான காலத்தில் ஈழத்தமிழர்களுக்கு துறைகள் தோறும் கிட்டாத ஒரு விடயத்திலான விவாதத்திலே தான் இன்று நாமெல்லாம் கலந்து கொண்டிருக்கிறோம்.

வென்றவன் பக்கமே வரலாறு சாயும் என்பதையும், வெல்பவன் சொல்வதே வரலாறாகும் என்பதையும் இனவாதம் பழுத்துப்போயுள்ள மாறிவரும் அரசுகளின் செயல்கள் காட்டுகின்றன.

முல்லைத்தீவில் குருந்தூர் மலை, நெடுங்கேணியில் வெடுக்குநாறி மலை, யாழ்ப்பாணத்தில் தையிட்டி, நேற்று திருகோணமலையில் சிறி சம்புத்த ஜயந்தி போதிவர்த்தன விகாரை. ஈழத்தமிழர்களின் பூர்வீக இடமெல்லாம் சட்டம் மௌனிக்க, அரச இயந்திரங்கள் காவல் காக்க, தமிழர்களை அடித்தும் அச்சுறுத்தியும் தடுத்தும் அறத்தைக் கொன்றும் விகாரைகள் எழும்புகின்றன.

பேரினவாத அடக்குமுறைக்குள் தமிழர்களுக்கு கிட்டாத ஒன்றைப் பற்றிய விவாதத்திலே இன்று கட்டமைக்கப்பட்ட இன அழிப்புக்கு உள்ளாக்கப்படும் மக்களின் சார்பாக வடக்கு, கிழக்கில் இடம்பெறும் இத்தகைய நீதிக்குப் புறம்பான பௌத்தமயமாக்கல் செயற்பாடுகளைக் கடுமையாக எதிர்க்கின்றோம். – தெரிவித்தார்.

# புத்தளத்தில் பீடி இலைகளுடன் முன்னாள் கலால் அதிகாரி கைது

**(கற்பிட்டி எம்.எச்.எம்.சியாஜ்)**

சட்டவிரோதமாக நாட்டிற்குள் கொண்டு வரப்பட்ட பீடி இலைகளை வைத்திருந்தமைக்காக புத்தளம் பிரிவு குற்றப் புலனாய்வுப் பிரிவின் அதிகாரிகளால் முன்னாள் கலால் அதிகாரி ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

புத்தளம் வெளிப்புற சுற்றுவட்ட சாலை பகுதியில் நேற்றுத் திங்கட்கிழமை காலை இவர் கைது செய்யப்பட்டார்.

மாத்தறை ஹக்மனையைச் சேர்ந்த 29 வயதான சந்தேக நபர், கலால் திணைக்களத்தில் சிறிது காலம் பணியாற்றிவிட்டு அதை விட்டு வெளியேறியவர் என விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

கைது செய்யப்பட்ட நேரத்தில், சந்தேக நபரிடம் கலால் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட அடையாள அட்டையும் இருந்ததாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர் புத்தளம் வெளிப்புற சுற்றுவட்ட சாலை பகுதியில் தற்காலிகமாக ஒரு வீட்டை வாடகைக்கு எடுத்து அங்கு வசித்து வந்த நிலையில், அதிகாரியின் வாழ்க்கை முறை குறித்து சந்தேகம் கொண்ட பொலிஸ் அதிகாரிகள் நடத்திய விசாரணையைத் தொடர்ந்து இந்தக் கைது இடம்பெற்றுள்ளது.

சந்தேக நபரின் மோட்டார் காரில் பீடி இலைகள் அடங்கிய 10 பொலிதீன் பைகளை கவனமாக பொதி செய்து வைத்திருந்தமையை காவல்துறை அதிகாரிகள் கண்டுபிடித்துள்ளனர்.

அவற்றை வேறு இடத்திற்கு எடுத்துச் செல்ல அவர் தயாராகி இருந்ததார் எனச் சந்தேகிக்கப்படுகின்றது.

கலால் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட அதிகாரபூர்வ அடையாள அட்டையைப் பயன்படுத்தி சந்தேக நபர் இந்த மோசடியில் ஈடுபட்டிருக்கலாம் என்று சோதனையை நடத்திய அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

மீட்கப்பட்ட பீடி இலைகள் மற்றும் மோட்டார் காருடன் கைது செய்யப்பட்டவர்,

மேலதிக விசாரணைக்காக புத்தளம் பொலிஸாரிடம் ஒப்படைக்க சோதனையை நடத்திய அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

# கட்சிகள் மாறுகின்றன; அரசுகள் மாறுகின்றன தமிழருக்கு எதிரான காட்சிகள் மாறுவதில்லை

## ‘இராவண சேனா’ அமைப்பின் தலைவர் கடும் எரிச்சல்

திருகோணமலையில் நடைபெறும் அசம்பாவிதங்கள் பல தரப்புக்களால் திட்டமிடப்பட்டு அரங்கேற்றப்பட்டவை என ‘இராவண சேனா’ அமைப்பின் தலைவர் கு.செந்தூரன் தெரிவித்தார்.

திருகோணமலை டச்பே கரையோரப் பகுதியில் வைக்கப்பட்ட புத்தர் சிலை விவகாரம் தொடர்பில் நேற்று மாலை ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் தெரிவித்தவை வருமாறு:–

கடலோரப் பிரதேசங்களில் இடம் பெற்ற கட்டுமானங்களை அகற்றக்கோரிய போது அந்த இடத்தில் தற்போது அடுத்த கட்டமாக பிக்குமார் அடாத்தாகப் புத்தர் சிலை வைக்க முற்பட்டனர். மக்களாலும் அரசியல்வாதிகளாலும் பல அழுத்தங்களை கொடுத்து பிறகு இரவு பாதுகாப்பு படையினரால் அது அகற்றப்பட்டது . இப்போது மாற்றீடான அழுத்தங்களை மேற்கொண்டதும் நாடாளுமன்றத்தில் அமைச்சர் ஆனந்த விஜேபால புத்தர் சிலையின் பாதுகாப்பு கருதியே அது அகற்றப்பட்டது, மீண்டும் அதே இடத்தில் சிலையை வைப்போம் என்றார்.

புத்தர் சிலை வைப்பது திருகோணமலைக்கு புதிதான விடயமல்ல. எத்தனை ஆயிரம் புத்தர்கள் வைத்து, ஆயிரக்கணக்கான மக்களையும் கொன்று புதைத்து, அடாத்தாக இடங்



களைப் பிடிக்கும் செயல்களை நாங்கள் பார்த்து கொண்டிருக்கிறோம்.

இப்போதும் புதிய அரசாங்கம் எமக்கு தீர்வு தரப்போகின்ற அரசாங்கம் அல்லது மிகப் பெரும்பான்மையுடன் இனவழிப்புகளுக்கு எதிராக செயற்படப் போகின்ற அரசாங்கம் என்று சொல்லப் பட்டது. ஆனால் அநுர அரசாங்கம் கூட மகாநாயக்க தேரர்களினதும் அல்லது சிங்கள பௌத்த பேரினவாதிகளினதும் எடுபிடிகளாகவே இருக்கின்றனர் என்பதை தற்போதைய நிகழ்வுகள் காட்டுகின்றன.

ஆகவே எந்த தமிழர்களுமே இந்த சிங்கள அரசாங்கங்களை நம்புவதற்கு தயாராகவில்லை.

முதலில் வலியுறுத்தியமை போல எந்த மக்கள் அல்லது எந்த ஊடகங்கள், எந்த வெளிநாட்டு அமைப்புக்கள், எந்த சிங்கள டயஸ்போராக்கள் கோட்டாபய ராஜபக்ஷவை ஜனாதிபதியாக ஆக்கினார்களோ அதே தரப்பினர்தான் ஜே.வி.பி. எனும் அரசாங்கத்தை அதே முகத்துடன் தேசிய மக்கள் சக்தியை நாட்டின் ஜனாதிபதியாக்கியுள்ளார்கள்.

அரசாங்கள் மாறுகின்றன. கட்சிகள் மாறுகின்றன. ஆனால் காட்சிகள் மட்டும் தமிழர்களுக்கு எதிராகவும் அல்லது தமிழ் தேசியத்துக்கு எதிராகவும் தமிழின மக்களுக்கு நியாயம் கொடுக்க முடியாத அரசாங்கங்களாகவும் இன்று வரைக்கும் காட்சி கொடுத்துக் கொண்டிருக்கின்றன .

இந்த சம்பவம் மன அழுத்தங்களை மட்டுமல்ல தமிழ் மக்களிடையே அவலத்தையும் ஏற்படுத்தியிருக்கிறது. யுத்தத்தால் அழிந்து காயப்பட்டிருக்கின்ற தமிழ் மக்களை மேலும் காயப்படுத்தி கொண்டிருக்கிறார்கள். இது தான் உண்மையாகவும் வரலாற்று தொடர் கதையாகவும் உள்ளது. இன்று மட்டுமல்ல, இனியும் இது தான் நடக்கப் போகின்றது.

தமிழ் மக்களாகிய நாங்கள் வலி சுமந்துதான் வாழ வேண்டிய நிர்ப்பந்தங்களுக்குள் இருக்கின்றோம். எந்த அரசாங்கத்தையும் நம்புவதற்கு நாங்கள் தயாராக இல்லை. ‘அநுர தோழர்கள்’ என தமிழ் மக்கள் கூட பின்னால் போனார்கள். அவர்கள் கூட வெட்கப்பட்டு வேதனைபடக் கூடிய நிகழ்வுதான் இங்கு நடந்து கொண்டிருக்கிறது. இந்த சம்பவம் அதில் ஒன்று. – மேலும் கூறினார்.



# அரிசி ஏற்றி வந்த லொறி தடம்புரண்டு விபத்து

(பா.சதீசன்)

வற்றாப்பளை பகுதியில் இருந்து புதுக்குடியிருப்பு நோக்கி அரிசி ஏற்றி வந்த லொறி நேற்றுப் பிற்பகல் ஜங்கன் குளம் பகுதியில் உள்ள வளைவில் திரும்ப முற்பட்டபோது கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகி தடம் புரண்டுள்ளது.

தற்போது நிலவும் அதிக மழை மற்றும் சாலையின் ஈரப்பதம், வாகனத்தின் அதிக வேகம் ஆகியவை காரணமாக அது தடம் புரண்டிருக்கலாம் என ஆரம்ப கட்ட விசாரணைகள் தெரிவிக்கின்றன. எனினும் வாகனத்தில் பயணித்தவர்களுக்கு எதுவித ஆபத்துகளும் ஏற்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை போக்குவரத்து பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.



# இரத்தினபுரி மாவட்டத்தில் மண்சரிவு

(ஶ்ரீநிவாசகம் இரவீந்திரன்)

இரத்தினபுரி மாவட்டத்தில் பெய்து வரும் தொடர் மழை காரணமாக இம் மாவட்டத்தில் ஆங்காங்கே மண்சரிவு ஏற்பட்டு வருகிறது.

இதனால், மண்சரிவு அபாயமுள்ள பகுதிகளில் வசிக்கும் மக்கள் எச்சரிக்கையாக இருக்குமாறு இரத்தினபுரி மாவட்ட செயலகம் அறிவித்துள்ளது

இம்மாவட்டத்தில் 500 க்கு மேற்பட்ட மண்சரிவு அபாயமுள்ள பகுதிகள் கண்டறியப்பட்டுள்ளன எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன

இரத்தினபுரி – கொழும்பு பிரதான பாதையில் புதிய நகரப்பகுதியில் மண் சரிவு ஏற்பட்டுள்ளது. இதனால் ஒருவழி பாதை மட்டுமே போக்குவரத்துக்காக திறக்கப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது.








# சிலாபம் கஞ்சிக்குளிய பெனடிக் கல்லூரிக்கு அதிபராக பாதிரியார் அல்லது கன்னியாஸ்திரியையே நியமியுங்கள்

## நகரத்தில் ஞாயிறன்று ஆர்ப்பாட்டம்

**(கற்பிட்டி எம் எச் எம் சியாஜ்)**

சிலாபம், கஞ்சிக்குளிய புனித பெனடிக்ட் கல்லூரியின் அதிபராக ஒரு ரோமன் கத்தோலிக்க பாதிரியார் அல்லது கன்னியாஸ்திரியை நியமிக்க வேண்டும் எனக் கோர. நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை சிலாபம் நகரில் ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப் பட்டது.

ஏராளமான கத்தோலிக்க பாதிரியார்கள், கன்னியாஸ்திரிகள் மற்றும் பெற்றோர்கள் இந்தப் போராட்டத்தில் பங்கேற்றனர்.

சிலாபம் கார்மலைட் தேவாலயத்தில் சிறப்பு வழிபாட்டில் ஈடுபட்ட பின்னர் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

118 ஆண்டுகள் பழமையான கஞ்சிக் குளிய புனித பெனடிக்ட் கல்லூரியில் இதுவரை கத்தோலிக்க பாதிரியார்கள் மற்றும் கன்னியாஸ்திரிகள் மட்டுமே அதிபர்களாக பணியாற்றியுள்ளனர் என்றும் போராட்டத்தில் பங்கேற்றவர்கள் தெரிவித்தனர்.

பள்ளியின் முதல்வர் கன்னியாஸ்திரியாக இருக்கும்போது, பட்டம் பெற்ற மத சார்பற்ற ஒருவரை அதிபராக நியமிப்பதன் மூலம் அதிகாரிகள் தேவையற்ற சிக்கலை உருவாக்கியுள்ளனர் என்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோர் தெரிவித்தனர்.

தற்போதைய சூழ்நிலைக்கு ஒரே தீர்வு கத்தோலிக்க பாதிரியார் அல்லது கன்னியாஸ்திரியை பள்ளியின் அதிபராக நியமிப்பதே வழி என்று போராட்டக்காரர்கள் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.




# மின்சாரசபை ஊழியர்கள் என்ற போர்வையில் மாதம்பை வீட்டில் கொள்ளையர் கைவரிசை!

**(கற்பிட்டி எம்.எச்.எம்.சியாஜ்)**

மின்சார சபை ஊழியர்கள் என்று கூறி வீட்டிற்குள் நுழைந்து, வீட்டில் இருந்த ஒரு பெண்ணின் கை, கால்களைக் கட்டி, ஆறு லட்சத்து இருபதாயிரம் ரூபா மதிப்புள்ள தங்க நகைகளைக் கொள்ளையடித்து தப்பிச் சென்ற இருவர் குறித்த விசாரணையைத் தாங்கள் தொடங்கியுள்ளனர் என மாதம்பே பொலிஸார் தெரிவித்தனர். கடந்த சனிக்கிழமை 15 ஆம் திகதி மாலை இந்தக் கொள்ளைச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மாதம்பே, பொதுவில பகுதியைச் சேர்ந்த ரத்நாயக்க முதியன்செலகே சோமாவதி (வயது 72) என்ற பெண் அளித்த முறைப்பாட்டை தொடர்ந்து விசாரணை தொடங்கப்பட்டது.

சம்பவம் நடந்த நேரத்தில் தனது கணவரும் மகளும் வீட்டில் இல்லை என்றும், மின்சார சபை ஊழியர்கள் என்று கூறி மோட்டார் சைக்கிளில் வந்த இரண்டு ஆண்கள் வீட்டிற்குள் நுழைந்து கொள்ளையடித்து தப்பிச் சென்றனர் எனவும் அவர் பொலிஸாரிடம் தெரிவித்தார்.

மாதம்பே பொலிஸார் மேலும் விசாரணைகளை மேற்கொண்டு வருகிறமை குறிப்பிடத்தக்கது



# கோடாலிக்கல்லு மாவீரர் துயிலும் இல்ல சிரமதான பணிகள் ஞாயிறன்று ஆரம்பம்

**(சண்முகம் தவசீலன்)**

முல்லைத்தீவு மாவட்டத்தின் கோடாலிக்கல்லு மாவீரர் துயிலும் இல்லத்தினுடைய 2025 ஆம் ஆண்டுக்கான மாவீரர் நாள் நினைவேந்தல் நிகழ்வுகளை அனுஷ்டிப்பதற்கான சிரமதான பணிகள் நேற்று முன்தினம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன.

மாவீரர்களுக்கு பொதுச்சுடர் ஏற்றப்பட்டு மலர் வணக்கம் செலுத்தப்பட்டமையைத் தொடர்ந்து சிரமதான பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

கோடாலிக்கல்லு மாவீரர் துயிலும் இல்லப் பிரதேசத்தை அண்டிய அயல் கிராமங்களில் உள்ள மக்கள், மாவீரர்களின் பெற்றோர், உரித்துடையோர் அனைவரையும் இந்த சிரமதானப் பணிக்கு வருகை தந்து ஒத்துழைப்பு வழங்குமாறும், மாவீரர் நாள் நினைவேந்தல் நிகழ்வுகளில் அனைத்து உறவுகளையும் கலந்து கொள்ளுமாறும் பணிக்குழுவினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

















# ஓட்டோ - வான் மோதி விபத்து ஓட்டோவின் சாரதி உயிரிழப்பு

**(மஸ்கெலியா விசேட நிருபர்)**

அதி வேகமாகப் பயணித்த ஓட்டோ ஒன்று எதிர்த் திசையில் வந்த வான் ஒன்றுடன் மோதிய விபத்தில் ஓட்டோ ஓட்டுநர் உயிரிழந்தார்.

கொழும்பிலிருந்து தலவாக்கலை நோக்கிச் சென்ற ஓட்டோவ. ஹட்டனில் இருந்து பொல்பிட்டிய வக்கம நோக்கிச் சென்ற வேனுடன் நேருக்கு நேர் மோதியது. ஹட்டன்– வக்கம பிரதான சாலையில் பொல்பிட்டிய–யடிவேலிய சந்திப்பில் நேற்றுக் காலை 9 மணியள வில் இந்த விபத்து இடம்பெற்றது.

விபத்தில் உயிரிழந்தவர் கொழும்பு பகுதியைச் சேர்ந்த 53 வயதான எச். எம். இந்திக பிரியகுமார ஆவார்.

இந்த விபத்தில் ஓட்டோவுக்குப் பலத்த சேதம் ஏற்பட்டுளது. வானின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார் எனொ பொல்பிட்டிய பொலிஸார் தெரிவித்தனர். அந்த சாரதியை ஹட்டன் நீதிவான் நீதிமன்றத்தில் தாங்கள் ஆஜர்படுத்த உள்ளனர் என பொலிஸ் அதிகாரி தெரிவித்தார்.









# வவுனியா கள்ளிக்குளம் சிதம்பரம் பிரதேசத்தில் மக்களின் பயிர் நிலங்களை சேதப்படுத்தும் வனவளத்திணைக்களம்!

(கி.வசந்தன்)

வவுனியா, கள்ளிக்குளம் சிதம்பரம் பகுதியில் மக்களின் நெற்காணிகளை வனவளத் திணைக்களம் கையகப்படுத்தியுள்ளதுடன், நெற்பயிர்களைச் சேதப்படுத்தி தேக்கு மரம் நாட்டும் நடவடிக்கையில் ஈடுபட்டுவருவதாக குற்றம் சாட்டியுள்ளனர்.

இது தொடர்பாக அம்மக்கள் தெரிவித்தவை வருமாறு:-

நாங்கள் பூர்வீகமாக இந்தக் காணிகளில் பயிர்செய்து வந்த நிலையில் கடந்த 1987 ஆம் ஆண்டு ஏற்பட்ட போரினால் இடம்பெயர்ந்திருந்தோம். மீண்டும் 2012 ஆம் ஆண்டு மீள் குடியமர்த்தப்பட்டமையுடன் எமது காணிகளில் நெற் பயிர்செய்கைகளில் ஈடுபட்டு வருகின்றோம்.


தற்போது 13 ஆண்டுகளின் பின் வனவள பிரிவு உத்தியோகத்தர்கள் எமது காணிகளை கையகப்படுத்தும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். அங்கு விதைக்கப்பட்டுள்ள பயிர்களை அழித்து தேக்கு மரம் நாட்டும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

தமது உழவு இயந்திரங்களை விவசாய பயிர்களுக்கு மேலாக ஓட்டிச் சென்று பயிர்களை சேதப்படுத்தி வருகின்றனர். இதனால் எமது வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது. இந்தக் காணிக்கான ஆவணங்களை வழங்க அரசாங்கத்தால் பதிவு செய்ததற்கான ஆவணமும் எங்களிடம் இருக்கிறது.

எனவே வனவளத்திணைக்களத்தின் நடவடிக்கையை தடுத்து நிறுத்தி, எமது பூர்வீக காணிகளை மீளவும் பெற்றுத் தருமாறு நாம் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுக்கிறோம் என்று தெரிவித்தனர். இது தொடர்பாக வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் பீ.ஏ.சரத்சந்திர அவர்களுக்கு பாதிக்கப்பட்ட மக்கள் மகஜர் ஒன்றையும் கையளித்தனர்.









# இன்றைய ராசி பலன்கள்- 18.11.2025




இன்று நன்மை தீமை இரண்டும் கலந்து காணப்படும்.உரையாடலின் போது கவனமாக இருங்கள்.பயணங்கள்செய்ய வாய்ப்புள்ளது.

பணியிடத்தில் சிறப்பான பலன்களைக் காணலாம்.உங்களின் சிறிய முயற்சிகள் பெரும் வெற்றியை அளிக்கும்.

உங்கள் துணையுடன் சில பயனுள்ள விஷயங்களைப் பேசுவீர்கள். என்றாலும் பேச்சு ஆக்கபூர்வமாக இருக்கும் வகையிலும் உறவின் நல்லிணக்கத்தை பராமரிக்கும் வகையிலும் இருக்குமாறு பார்த்துக் கொள்ளுங்கள்.

இன்று கணிசமான தொகை உங்களிடம் காணப்படும். உங்கள் குடும்பத்தோடு பயணம் செல்ல நேரலாம். அதற்காக பணத்தை செலவு செய்வீர்கள்.




இன்று உங்கள்ஆற்றலையும் வலிமையையும் உணரும் நாள்.இன்று உங்கள் தன்னம்பிக்கை அதிகரிக்கும்.

கடினமான பணிகளைக் கூட இன்று நீங்கள் எளிதாகச் செய்வீர்கள். நீங்கள் பணிகளை திறம்பட கையாண்டு உங்கள் மேலதிகாரிகளின் பாராட்டை பெறுவீர்கள்.

இன்று இருவரும் மனம் பொருந்தி ஒற்றுமையுடன் கானாப்படுவீர்கள். உங்கள் காதலின் எதிர்காலத்தை பற்றி கலந்தாலோசிபீர்கள்.

இன்று பண வரவு காணப்படுகின்றது. நீங்கள் எதிர்பாராத வகையிலிருந்து பணம் கிடைக்கும்.

ஆரோக்கியம் சிறப்பாக காணப்படும். தியானம் அல்லது யோகா மேற்கொள்வது உங்களுக்கு நல்லது.




இன்று சிக்கல் நிறைந்த நாளாக காணப்படும். வளர்ச்சி குறைந்து காணப்படும். இதனால் இன்று ஏமாற்றங்களும் நிறைந்து காணப்படும்.

உங்கள் சக பணியாளர்களிடம் அகந்தைப் போக்கை காண்பிப்பீர்கள். உங்கள் வளர்ச்சி குறித்து அவர்கள் சிறிது பொறாமைப்படுவார்கள்.

உங்கள் துணையுடன் சமூகமான உறவு காணப்படாது. நல்லுறவை பராமரிக்க சகஜமான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும்.

இன்று பண இழப்பு ஏற்பட வாய்ப்புள்ளது. பணத்தை கவனமாகக் கையாள வேண்டும். சேமிப்பு குறைந்து காணப்படும். இன்று நிதி குறித்த எந்த முடிவையும் எடுக்க வேண்டாம்.

உயரமுத்தம் மற்றும் பதட்டம் காரணமாக தலைவலி ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே ஆரோக்கியத்தில் கவனம் தேவை.




நீங்கள் எந்த செயலை செய்தாலும் அதனை பொறுப்புடன் செய்வீர்கள். இதனால் வளர்ச்சியும் வெற்றியும் எளிதாகப் பெறுவீர்கள். இன்று முக்கிய முடிவுகளை எடுக்கலாம்.

உங்கள் பணிகளை சாமர்த்தியமாக செய்வீர்கள்.தொழில் சார்ந்த அணுகுமுறை மேற்கொள்வீர்கள். பணிகளை எளிதாக முடிப்பீர்கள்.

உங்கள் துணையுடன் சகஜமான அணுகுமுறை மேற்கொண்டு நல்லுறவை ஏற்படுத்துவீர்கள். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு காணப்படும்.

இன்றைய நாளை அதிக முயற்சி எடுக்க பயன்படுத்திக் கொள்ளுங்கள். இன்று ஊக்கத்தொகை கிடைக்க வாய்ப்புள்ளது.

இன்று அதிக ஆற்றலுடன் காணப்படுவீர்கள். இதனால் உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




உங்கள் இலக்குகளை அடைவதற்கு சிறந்த நாள். எளிதாக உங்கள் இலக்குகளை அடைவீர்கள். அடிக்கடி பயணம் ஏற்படலாம். அது உங்களுக்கு பயனுள்ளதாக இருக்கலாம்.

உங்கள் பணியில் திறமைகளை வெளிப்படுத்துவீர்கள். இது உங்கள் மேலதிகாரிகளால் பாராட்டப்படும். உங்கள் பணிகளை உற்சாகமாக செய்வீர்கள்.

உங்கள் இருவரிடம் காணப்படும் பரஸ்பர புரிந்துணர்வு காரணமாக உங்கள் துணையிடம் உங்கள் கருத்துக்களை மனம் திறந்து கூறுவீர்கள்.

நிதிநிலைமை மகிழ்ச்சிகரமாக இருக்கும். உங்களின் கடின உழைப்பிற்கு கூடுதல் பணம் ஊக்கத்தொகையாக கிடைக்கும்.




இன்று அதிக சிந்தனையுடன் காணப்படுவீர்கள். எந்த விஷயத்தையும் லேசாக எடுத்துக் கொள்வதன் மூலம் வெற்றி காணலாம். அமைதியாக இருக்கவேண்டும். தியானம் மேற்கொள்ள வேண்டும்.

பணி நிமித்தமான பயணங்கள் காணப்படும். அதிக பணிகள் காரணமாக சவாலான சூழ்நிலைகளை சந்திக்க நேரும். நீங்கள் சற்று சோர்வடைவீர்கள்.

உங்களிடம் காணப்படும் அகந்தை காரணமாக உங்கள் துணையுடன் தகவல் பரிமாற்ற பிரச்சினை காணப்படும். உங்கள் துணையுடன் நல்லுறவை பராமரிக்க இதனை தவிர்த்தல் வேண்டும்.




அதிர்ஷ்டக் குறைவு காரணமாக கடைசி நிமிடத்தில் சிறந்த வாய்ப்புகளை இழப்பீர்கள். இது உங்களுக்கு கவலையை அளிக்கும். முக்கியமான முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும்.

பணிகளைக் கையாளும் போது ஸ்திரத்தன்மை இழந்து காணப்படுவீர்கள். சக பணியாளர்கள் ஆதரவு கிட்டாது. மேலதிகாரிகளின் அங்கீகாரம் கிடைக்காது.

நீங்கள் உணர்ச்சி வசப்பட்ட நிலையில் இருப்பீர்கள். இது உங்கள் துணையுடனான உறவில் வெளிப்படும். உங்கள் துணையிடம் நட்பான அணுகுமுறை தேவை.

இன்று அதிக செலவுகள் காணப்படும். உங்கள் பொறுப்புகள் இன்று அதிகமாக காணப்படும். உங்களிடம் உள்ள குறைந்த பணத்தைக் கொண்டு பொறுப்புகளை நிறைவேற்ற இயலாது.




உங்கள் பொறுமை சோதனைக்குள்ளாகும் நாள். இன்று திட்டமிட்டு செயலாற்ற வேண்டியது அவசியம். பிரார்த்தனை மற்றும் பக்திப் பாடல்கள் கேட்பது உங்களுக்கு ஆறுதல் தரும்.

நீங்கள் குறித்த நேரத்தில் பணிகளை முடிக்க இயலாது. பணிகள் நிலுவையில் இருக்கும். அது உங்களுக்கு கவலையை அளிக்கும். சக பணியாளர்களிடமிருந்து வரும் வதந்திகளை நம்ப வேண்டாம்.

உங்கள் துணையுடன் நல்ல தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள், நீங்கள் இருவரும் வெளியிடங்களுக்கு செல்வதற்கான வாய்ப்பு உள்ளது. இதன் மூலம் உறவு மேம்படும்.

இன்று பணம் சம்பாதிக்க சாதகமான வாய்ப்புகள் கிடைக்கும். உங்கள் சேமிப்பு திறன் அதிகரிக்கும்.

# இன்றைய ராசி பலன்கள்- 18.11.2025




இன்று குறைந்த செயலாற்றலுடன் காணப்படுவீர்கள். ஆன்மீக ஈடுபாடு மற்றும் பிரார்த்தனை மேற்கொள்வது நல்லது. தியானமும் மேற்கொள்ள லாம். பிறருடன் உரையாடும் போது கவனமாக உரையாடுங்கள்.

பணியில் உங்கள் பொறுப்புகளை சிறிது பதட்டத்துடன் கையாள்வீர்கள். இதற்கு எதிர்காலம் பற்றிய உங்கள் தேவையற்ற பயமே காரணம். அமைதியாக உற்சாகத்துடன் பணியாற்றுங்கள்.

கருத்து வேறுபாடு காரணமாக உங்கள் துணையுடன் ஈகோ பிரச்சினை ஏற்படும். அதனை தவிர்க்க வேண்டும். நட்பான அணுகுமுறை வேண்டும்.

இன்று பண வரவு குறைந்து காணப்படும்.




இன்று நீங்கள் அதிகப் பணியில் மூழ்கி இருப்பீர்கள். புதிதாக ஒன்றை அடைவதில் உறுதியாக இருப்பீர்கள். கடினமாக உழைப்பதன் மூலம் வெற்றி காண்பீர்கள்.

பணியிடச் சூழல் சிறந்த செயல் திறன் ஆற்ற சாதகமாக இருக்கும். உங்கள் வேலைத் தரம் உங்களின் திறமையை பறை சாற்றும். நீங்கள் பணி சம்பந்தமான சந்திப்பில் கலந்து கொள்வீர்கள். உங்கள் கருத்துக்களை தெளிவாக கூறுவீர்கள்.உங்கள் துணையுடன் அன்பான தருணங் களை பகிர்ந்து கொள்வீர்கள். எதிர்கால முடிவுகளைப் பற்றி கலந்தாலோசித்து பரஸ்பரம் ஒரு முடிவுக்கு வருவீர்கள்.உங்கள் கடின உழைப்பின் மூலம் ஊக்கத்தொகை மற்றும் சலுகைகள் வகையில் பண வரவு காணப்படும். அது உங்களுக்கு உற்சாகத்தை அளிக்கும்.

உங்களின் ஆரோக்கியமான மன நிலை காரணமாக இன்று ஆரோக்கியம் சிறப்பாக காணப்படும்.




இன்று உங்கள் வளர்ச்சியில் சில தடைகள் காணப்படும். சிறப்பாக திட்டமிடுதல் மற்றும் யுக்திகளை கையாள்வதன் மூலம் வெற்றி பெற லாம். அமைதியாக இருந்து பதட்டத்தை தவிர்ப்பதன் மூலம் நன்மை கிடைக்கும்.

பணிகளை முன்கூட்டியே திட்டமிடுவதன் மூலம் தவறுகள் நேராமல் தடுக்கலாம். இதனால் உங்கள் பணியின் தரம் உயரும்.

உங்கள் துணையின் விருப்பப்படி நடந்து கொள்வதன் மூலம் மகிழ்ச்சியை தக்க வைத்துக் கொள்ளலாம். வேறு விதமாக செயல்பட்டால் குழப்பமும் பதட்டமும் ஏற்படும்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக இருக்காது. என்றாலும் பூர்வீகச் சொத்து மற்றும் எதிர்பாராத வகையில் பணம் கிடைக்கும்.




இன்று உங்கள் செயல்களில் கவ னமாக இருக்க வேண்டியது அவசியம். எதிர்மறை எண்ணங்களை வளர்த்துக் கொள்ளாதீர்கள். நம்பிக்கையுடனும் மகிழ்ச்சியுடனும் இருங்கள்.

பணியிடத்தில் அமைதியான சூழ் நிலை காணப்படாது. சக பணியாளர் கள் மற்றும் உங்கள் மேலதிகாரிகள் உங்களை புறக்கணிப்பது போலவும் தவிர்ப்பது போலவும் உணர்வீர்கள். உங்கள் பணிக்கு அங்கீகாரம் கிடைக்காது.

உங்கள் துனையிடத்தில் பொறுமையின்மையும் கவனமற்ற வார்த்தைகளும் இருவருக்குமிடையே மகிழ்ச்சியற்ற தன்மையை ஏற்படுத்தும். இத்தகைய நடத்தையை தவிர்ப்பதன் மூலம் மகிழ்ச்சியை அனு பவிக்கலாம்.



# பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபாவின் மாணவன் இன்று கொழும்பில் நடத்தும் சாயி பஜனை

பகவான் ஸ்ரீ சத்ய சாய் பாபாவின் 100 ஆவது ஜெனன தின நிகழ்வுகள் கொழும்பு புதுச் செட்டி தெரு சாயி நிலையத்தில் நவம்பர் மாதம் 23 ஆம் திகதி சிறப்பாக நடைபெறுவதற்கு முன்னோட்டமாக, இன்று 18 ஆம் திகதி மாலை 6 மணிக்கு ஒரு விஷேட பஜன் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

பகவான் ஸ்ரீ சத்ய சாய் பாபாவின் மாணவன், பிரசாந்தி நிலைய பிரதான பஜன் பாடகர், கர்நாடக சங்கீதத்தில் முதுநிலை பட்டம் பெற்றவர், சங்கீத துறையில் பல தடவைகள் தங்க மெடல் கள் வாங்கியவர், பகவானின் சங்கீத பல்கலைக்கழகத்தில் பாண்டித்தியம் பெற்றவர், பல நாடுகள் சென்று தனது கர்நாடக இசை, மெல்லிசை, பக்தி பாடல்கள், பஜன் போன்ற நிகழ்வுகளை நடாத்தியவர் என்று மதிக்கப்படும் பேராசிரியர் கலாநிதி விவேக் கார்மகே அவர்கள் சாயி பஜன் ஒன்றை நடத்த வுள்ளார்.

இலங்கையில் பிரசித்தி பெற்ற சாயி நிலையமான, கொழும்பு சத்ய சாய்பாபா மத்திய நிலையத்தில் வீற்றிருக்கும் சீரடி சாயி பாபா மற்றும் சத்ய சாய்பாபா சன்னதியான சாயி நிலையத்தில், தனது பஜன் இடம் பெறுவதில் தாம் பெருமைபடுகின்றார் என அவர் கருதுகிறார்.